Registered as a news paper | பக்கங்கள்: பத்து | விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 | திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 30 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 11 (16.12.2002) திங்கட்கிழமை | இதழ் : 76

புலமைப்பரிசில் திட்டம் – 2003

விண்ணப்ப முடிவு திகதி - 20.12.2002

O/L 2002 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மேற்படி புலமைப்பரிசில் திட்டத்தின் முடிவு திகதி 20-12-2002 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.

(சி-259)





வட-கிழக்குப் புனர்வாழ்வு, அபிவிருத்திக்கான உபகுழுவின் கூட்டத்திற்கு வருகை தந்த பேணாட் குணதிலகவை அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் வரவேற்பதை முதலாவது படத்திலும் - புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கான செயலகத்தின் பெயர்ப்பலகையை ஜப்பானியத் தூதுவர் திரைநீக்கம் செய்வதை இரண்டாவது படத்திலும் - உபகுழுக் கூட்டம் நடைபெறுவதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்- அலெக்ஸ்)

# வெளிநாட்டு நிதியுதவியை கையாளல்

# கிளிநொச்சியில் உயர்மட்ட ஆராய்வு!

## இன்றும் பேச்சுகள் தொடரும்

(கிளிநொச்சி)

**வட-கிழக்கு புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திக்கான உபகுழுக் கூட்டம் நேற்று கிளிநொச்சியில் ஆரம்பமானது. இக்கூட்டத்தில் அபிவிருத்தி, புனர்வாழ்வு சம்பந்தமான விடயங்களைப் பற்றி விரிவாக ஆராயப்பட்டது.**

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வட-கிழக்கு அவசர புனரமைப்பு, அபிவிருத்திப் பணிகளுக்கான செயலகத்தின் தொழிற்பாட்டுக்கான வரவு செலவுத்திட்டம், அதன் கட்டமைப்பும் தொழிற்பாடுகளும், வெளிநாட்டு நிதியுதவிகளுக்கான பொறுப்பும் கையாளலும் தொடர்பாக இக்கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இரு அமர்வுகளாக இடம்பெற்ற (10 ஆம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வுச் செயலகம் வைபவரீதியாக திறப்பு!

(கிளிநொச்சி)

வட-கிழக்குக்கான உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுச் செயலகம் நேற்றுக் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டது. காலை 11.30 மணியளவில் ஆரம்பமாகிய இவ்வைபவத்தின்போது பெயர்ப்பலகையை ஜப்பானியத் தூதுவர் செய்சுரோ ஒட்சுகா திரைநீக்கம் செய்து வைத்தார். நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க் நாடாவை வெட்டி அலுவலகத்தை திறந்துவைத்தார்.

அங்கு அவர் உரையாற்றும்பொழுது, யுத்தத்தால் அழிந்துபோன வட-கிழக்கைக் கட்டியெழுப்புவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு இந்த செயலக அங்குரார்ப்பணம், யுத்த வரலாற்றில் (10 ஆம் பக்கம் பார்க்க)



## கிழக்குக் கடலில் மர்மக் கப்பல் கடற்படை தேட தப்பிச்சென்றது

(கொழும்பு)

கிழக்கு கடற்பரப்பில் காணப்பட்ட மர்மக் கப்பலொன்றை இந்தியக் கடற்படை விரட்டிச்சென்றபோது அக்கப்பல் தப்பிச்சென்று, சர்வதேச கடற்பரப்பினுள் நுழைந்துவிட்டதாக இலங்கைக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

சில தினங்களுக்கு முன் இந்த மர்மக்கப்பல் புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு கிழக்குப் பகுதிக்கு வந்ததாகக் கிடைத்த தகவலையடுத்து தாம் தேடுதல் நடத்தியதாக இலங்கைக் கடற்படையினர் தெரிவித்தனர். எனினும், இந்தக்கப்பல் கிழக்குக் கரையிலிருந்து 90 கடல்மைல் தொலைவில் காணப்பட்டதாகவும் இந்தக்கப்பலை இந்தியக் கடற்படை விரட்டிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய கடற்படையிடமிருந்து தப்பித்த இக்கப்பல், சர்வதேச கடற்பரப்பினுள் நுழைந்து இந்தோனேஷியாப் பக்கமாகச் சென்றதாக இந்தியக் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன. (01)

## வடக்கு கடற்படைத் தளபதி கொழும்பிற்கு இடமாற்றம்!

(கொழும்பு)

வடபிராந்திய கடற்படை கட்டளைத் தளபதி றியர் அட்மிரல் சரத் வீரசேகர கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். வட பிராந்தியத்துக்கான புதிய கட்டளைத் தளபதியாக றியர் அட்மிரல் நந்தன துடுவத்த நியமிக்கப்பட்டுள்ளார்.

வடபகுதியிலிருந்து இடமாற்றப்பட்ட றியர் அட்மிரல் சரத் வீரசேகர, கொழும்பிலுள்ள கடற்படை தலைமையகத்தில் நடவடிக்கை இயக்குநர் பதவியில் அமர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வெற்றிடமாகவுள்ள மேற்கு பிராந்திய (10 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவிலிருந்து வெளியேறுகிறோம் 10 உறுப்பினர்கள் தங்க அனுமதிக்குக!

### அங்கு சென்ற ஆயரிடம் ஈ.பி.டி.பி. கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவை விட்டு நாம் வெளியேறுகின்றோம். ஆனால், எமது கட்டுப்பாட்டில் உள்ள நெடுந்தீவுப் பிரதேச சபையின் தலைவர் உட்பட எமது பத்து உறுப்பினர்களை நெடுந்தீவில் தங்கியிருக்க அனுமதிக்க வேண்டும். இவ்வாறு நெடுந்தீவில் உள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் நேற்று தம்மைச் சந்தித்த, யாழ். ஆயரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

நேற்றுக்காலை 11 மணியளவில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, யாழ்.மறை மாவட்ட குருமுதல்வர் செல்வராஜா மற்றும் மூன்று குருமார் உள்ளடங்கிய குழுவினர் நெடுந்தீவிற்கு விஜயம் செய்தனர். நெடுந்தீவு சென்ற இவர்கள், நெடுந்தீவில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



கடல்ல சுதந்திரமா இறங்க வர்ற வராவது வழிதருவாரோ...?

## அபிவிருத்தி, புனர்வாழ்வு செயலக பணிப்பாளராக செல்வின் நியமிப்பு

(கொழும்பு)



கிளிநொச்சியில் செயற்படவுள்ள வட-கிழக்குக்கான உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுச் செயலகத்திற்கான நிர்வாகிகள் நேற்று நியமிக்கப்பட்டனர்.

கிளிநொச்சி அரச செயலக வளாகத்தில் செயலகத்தின் அலுவலகம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த நிர்வாகிகளும் தமது கடமையை நேற்று ஆரம்பித்தனர்.

செயலகத்தின் பணிப்பாளராக செல்வின் இரேனியஸ் - விடுதலைப் புலிகளின் சிபாரிசின் பேரில் நியமிக்கப்பட்டார்.

இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரியான இவர், தற்போது திருமலையிலுள்ள மாகாணக் கைத்தொழில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம் மாநகரசபை
## முக்கிய அறிவித்தல்

தற்போது நாட்டின் சூழ்நிலை வழமைக்குத் திரும்பியுள்ள நிலையில் யாழ்ப்பாண நகரில் சன நெருக்கடி அதிகம் ஏற்பட்டு வருவதால் நகரின் வீதியோரங்களில் பொருட்களை வைத்து விற்பனை செய்வது பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கின்ற செயலாகும். இதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே வீதியோரங்களில் பொருட்கள், பழங்கள் என்பவற்றை வைத்து விற்பனை செய்யவேண்டாம் என யாழ்ப்பாணம் மாநகரசபை இத்தால் கேட்டுக்கொள்கின்றது.

தவறின் வீதியோரங்களில் தொல்லை ஏற்படுத்துபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை வருத்தத்துடன் அறியத்தருகின்றேன்.

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

*மாநகரசபை,*
*யாழ்ப்பாணம்.*
*13.12.2002.*

(சி-318)

---

**நிறைஞ்சனாஸ் சங்கானை**

*முரளி, பிரதியூஷா, மனோஜ், உமா நடித்த*

## கடல் பூக்கள்

17ஆம் திகதி முதல்

**AIR FORCE - I**

காட்சிகள்:
11.00, 2.45, 6.00 (பு.நே)

(சி-287)

---

## ராஜா
யாழ்ப்பாணம்.



18ஆம் திகதி வரை

## வில்லன்
10.30, 2.30

16 - 18 வரை

**UNIVERSAL SOLDIER**
(WAR FILM)
7.00 மட்டும்

(சி-262)

---

## லாலாவின் வர்த்தக விளம்பர இலவசப் பத்திரிகை சேவை

*அன்பார்ந்த மக்களே!*

ஆற்றல்மிக்க அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க அறிஞர்களின் ஆலோசனைப்படி இந்தச் சேவையை நாம் நடத்த முன்வந்துள்ளோம்.

எமது ஈழமண்ணில் முதன்முறையாக 8 பக்கங்கள் கொண்ட மாதம் இருமுறை வெளிவரும் இலவசப் பத்திரிகையாக இதனைப் பிரசுரிக்க எண்ணியுள்ளோம் என்பதை எமது சோப் பாவனையாளர்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றேன்.

உரிமையாளர்,
## லாலா சோப் தொழிந்சாலை
அச்சுவேலி.

(சி-310)

---

## இன்றைய நாள் இனிய நாள்

**16-12-2002 - திங்கட்கிழமை**

**சித்திரபானு வருடம், மார்கழி மீ, - 01ம் திகதி**

*திதி* :- பூர்வபட்ச துவாதசி - இரவு - 9.16 அதன் மேல் திரயோதசி.

*நட்சத்திரம்* :- **பரணி** - இரவு - 1.41 வரை, அதன் மேல் கார்த்திகை.

**மேடம்** :- உளப்பூரிப்பு, நண்பர்கள், உறவினர் மகிழ்வு, விதம் விதமாக அணிவதில் மகிழ்வு, சயன சுகம், தொழில் ஸ்தானத்தில் மௌனம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**இடபம்** :- மனதில் கர்வநிலை, மிதமிஞ்சிய உணவு, வாக்குவாதம், தொழில் ஸ்தானத்தில் நற்பெயர், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**மிதுனம்** :- மனத்தில் தெய்வீக சிந்தனை, பணவரவு, நண்பர்கள் சந்திப்பு, தொழிற்சிறப்பு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- சமய/சமூகசேவையில் புகழ், எடுத்த காரியம் வெற்றி, மனமகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**சிங்கம்** :- மனதில் புதுப்பொலிவு, புத்திரர் மகிழ்ச்சி, தெய்வ வழிபாடு, மனதில் உற்சாகம், தொழில் ஸ்தானத்தில் அமைதி, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**கன்னி** :- புதிய ஒப்பந்தங்கள் எழுதுவது, புதிய காரியங்கள் தொடங்குவது நன்றல்ல, தன்னையறியாத பயம், தொழில் ஸ்தானத்தில் நற்பெயர், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- பணவரவு நன்று, வாகனப்பலன், சுற்றுலா மகிழ்வு, உடல் குளிர்ந்த உணவு, உளம் மகிழ்ச்சி, தொழில் முன்னேற்றம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**விருச்சிகம்** :- நோய் நீக்கம், பணவரவு, கடன்வசதி, சுகவாழ்வு, தொழில்முன்னேற்றம், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**தனு** :- புத்திரர் மகழ்ச்சி, புகழ், சமய/சமூக சேவை மதிப்பு, தொழில் ஸ்தாபனத்தில் மௌனம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபரம் சமநிலை.

**மகரம்** :- மாதா உடனலக்குறைவு, பெண்கள் உடனலக்குறைவு, வைத்தியச்செலவு, வாகனச்செலவு, தொழில் முன்னேற்றம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கும்பம்** :- செய்தொழில் முன்னேற்றம், பணவரவு, ஆடையாபரண மகிழ்ச்சி, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**மீனம்** :- வரவுக்கு மிஞ்சிய செலவு, காரியத்தடை, மனச் சஞ்சலம், வாக்குவாதம், சண்டை சச்சரவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமநிலை.

---

# NEW SCIENCE HALL

**கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.**

## 2005 A/L
## கணித, உயிரியல் பிரிவு

**ஆரம்பம் → 19.12.2002**

**வியாழன் காலை 8.30 மணி**

**எமது வழமையான ஆசிரியர் குழு**

(சி-317)

# பேச்சில் அவசரம் வேண்டாம் நிதானமாக முன்னேறுங்கள்!

## ஜேர்மனியின் தெற்காசிய விவகாரத் தலைவர் முல்லர்

(கொழும்பு)

ஜேர்மனியில் விடுதலைப்புலிகள் நிதி சேகரிப்பில் ஈடுபடுவதாக கூறப்படுவது தொடர்பாக எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை என்று ஜேர்மனியின் தெற்காசியப் பிராந்திய விவகாரங்களுக்குப் பொறுப்பான திணைக்களத்தின் தலைவர் கலாநிதி கிறிஸ்தோப்பர் முல்லர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலை குறித்து ஆராய்வதற்காக இங்கு வந்திருந்த இவர்- கொழும்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளுக்குச் சென்ற பின்னர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, புலிகள் ஜேர்மனியில் நிதி திரட்டுவது தொடர்பாக தமது அரசாங்கத்திடம் எந்த ஆதாரங்களும் இல்லை எனத் தெரிவத்த அவர், ஜேர்மனியை பொறுத்த வரையில் அதன் தென்னாசிய வரைபடத்தில் இலங்கைக்கு, சமீப காலங்களில் முக்கிய இடம் பெற்றுள்ளார். சமாதான முயற்சிகள் காரணமாக இலங்கைக்கு வளமான எதிர்காலமொன்று உள்ளது.

சமாதான முயற்சிகள் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்தும், இது வெறுமனே அபிவிருத்தித் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டதாக மட்டும் அமையாமல், பொருளாதார ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்டதாகவும் அமையும்.

ஒஸ்லோ மாநாடு இலங்கையைப் பொறுத்த வரையில் பாரிய வெற்றியாகும். சமாதான முயற்சிகளில் ஏற்படும் முன்னேற்றத்தைப் பொறுத்தே இலங்கைக்கான, ஜேர்மனியின் நிதியுதவி அதிகரிக்கப்படும். வேகமான முன்னேற்றம் ஏற்படும் பட்சத்தில் ஜேர்மனி மேலதிக உதவிகளை வழங்கத் தயாராக இருக்கிறது. சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளவர்கள் நிதானமாக முன்னேற வேண்டும். அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்க வேண்டும் என கிறிஸ்தோப்பர் முல்லர் மேலும் தெரிவித்தார்.

# பிரதிப் பொலிஸ்மா அதிபர் நியமனம் நேர்முகப் பரீட்சையில் முறைகேடு!

## மீண்டும் நடத்துமாறு பொலிஸ் சேவை ஆணைக்குழு உத்தரவு

(கொழும்பு)

பிரதிப் பொலிஸ் மா அதிபர்களைப் பதவியுயர்த்துவதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகவும், இதனால் மீண்டும் நேர்முகப்பரீட்சையை நடத்துமாறும் அரசாங்க பொலிஸ் சேவை ஆணைக்குழு பொலிஸ் தலைமையகத்துக்குப் பணிப்புரை விடுத்துள்ளது.

பிரதிப் பொலிஸ் மா அதிபர்களாக பதவியுயர்வு பெறுவதற்கு ஏழு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டிருந்தன. இதிலேயே முறைகேடுகள் இடம்பெற்றதாக கூறி, மீண்டும் நேர்முகப் பரீட்சைகளை நடத்த உத்தரவிடப்பட்டிருக்கின்றது.

இதனையடுத்து பொலிஸ் சேவை ஆணைக்குழு இந்த முறைகேடுகள் குறித்த விசாரணைகளை ஆரம்பித்துள்ள அதேவேளை, மீண்டும் நேர்முகப்பரீட்சைகளை நடத்துமாறும் உத்தரவிட்டுள்ளது. பொலிஸ் சேவை ஆணைக்குழு அமைக்கப்படுவதற்கு முன்னரே இந்த நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டிருந்தன.

# என்றும் இல்லாத இலாபம் சம்பாதிக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

(கொழும்பு)

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் இவ்வருடம் 16 கோடி 60 இலட்சம் ரூபா வருமானத்தைப் பெற்றுள்ளது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் வரலாற்றில் மிகவும் அதிகப்படியான வருமானத்தை இவ்வருடம் பெற்றுள்ளது.

வெளிநாட்டு பணியகத்தின் புதிய முகாமையாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாகவே இவ் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம்வரை விமான நிலையத்தின் அலுவலக பதிவுக் கட்டணமாக 30 இலட்சம் ரூபா சேகரிக்கப்பட்டது. இந்த வருமானம் ஒக்டோபர் மாதத்தில் 43 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. (ச)

# மட்டு. பாதுகாப்பு உப குழு இரண்டாவது கூட்டம் நாளை

## கருணா, ஒஸ்ரின் கலந்து கொள்வர்

(மட்டக்களப்பு)

பாதுகாப்புத் தொடர்பான மட்டக்களப்பு மாவட்ட உப குழுக கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை வவுணதீவில் நடைபெறவுள்ளது.

சூனியப்பிரதேசத்தில் அமைந்துள்ள வவுணதீவுப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில், கடந்த மாதம் நடைபெற்ற மட்டு. மாவட்ட பாதுகாப்பு உப குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், சிபார்சுகள் தொடர்பாகவும்- அவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் விசேடமாக ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தரப்புக்கு மூத்த தளபதி கேணல் கருணா அம்மானும், அரச தரப்புக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவும் தலைமை வகிப்பர்.

அத்துடன் புலிகள் தரப்பில் மட்டு - அம்பாறை அரசியற்றுறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் முக்கிய தளபதிகளும்,

இராணுவத் தரப்பில் 23ஆவது டிவிசனின் தளபதி பிரிகேடியர் பாலசூரிய மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# நாடாளுமன்ற செயலரை நியமிக்க பொ. ஐ. மு, ஜே. வி. பி வற்புறுத்து!

(கொழும்பு)

இலங்கை நாடாளுமன்றத்திற்கான செயலாளர் நாயகம் பதவியை உடன் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொது ஜன ஐக்கிய முன்னணி மற்றும் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக ஐம்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

முன்னர் நாடாளுமன்றச் செயலாளராகக் கடமையாற்றிய தம்மிக்க இதுகொட, அரசியலமைப்புச் சபையின் செயலாளர் நாயகமாக நியமிக்கப்பட்டதையடுத்தே இப்பதவி வெற்றிடம் நிரப்பப்படாமல் உள்ளது.

நிரந்தர நாடாளுமன்றச் செயலாளர் ஒருவர் நியமிக்கப்படாதமையால் நாடாளுமன்றத்தில் பல நிர்வாகச் செலவுகள் ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் பக்கச் சார்பற்ற ஒருவரை இப்பதவிக்கு நியமிக்கும்படியும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# திருமலையில் கைதான புலிகளின் பிணை சட்டமா அதிபரை ஆஜராகுமாறு உத்தரவு

(கொழும்பு)

திருகோணமலைக் கடற்பகுதியில் கடந்த நவம்பர் முதலாம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் ஆறு விடுதலைப் புலிகளையும் விடுவிக்கக் கோரும் பிணை மனுத் தொடர்பாக, சட்டமா அதிபர் மற்றும் திருமலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோரை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராகப் பணிக்கப்பட்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, இவர்களை விடுவிப்பதற்கு சட்டமா அதிபர் ஆட்சேபனை தெரிவிக்கமாட்டார் எனத் தாம் நம்புவதாகத் தெரிவித்திருந்தார். இதனையடுத்தே மேன்முறையீட்டு நீதிமன்றம், சட்டமா அதிபர் கே.சி. கமலசபேசனையும், திருமலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளையும், ஜனவரி 23ஆம் திகதி மன்றில் ஆஜராகப் பணித்துள்ளது.

அதேவேளை, புலிகளை விடுவகக சட்டமா அதிபர் முன்கூட்டியே இணக்கம் தெரிவித்தால் பிணையில விடுவிக்கத் தாம் உத்தரவு பிறப்பிபபதாகவும் நீதிபதி தெரிவித்துள்ளார்.

# ராணுவத்தின் சிறந்த பிரிவாக 4 ஆவது தேசிய காவற்படை

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின் 2002 ஆம் ஆண்டுக்கான சிறந்த படைப்பிரிவாக 4 ஆவது தேசிய காவற்படை பற்றாலியன் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது. சிறந்த படைப்பிரிவாகத் தெரிவு செய்யப்பட்ட 4 ஆவது தேசிய காவற்படைக்காக விருது வழங்கிக் கௌரவிக்கும் விழா அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த வைபவத்தில் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்லவிடம் இருந்து கௌரவ விருதை, 4 ஆவது தேசியக் காவற்படைப் பற்றாலியனின் கட்டளை அதிகாரி றியன்ஸி பெரேரா பெற்றுக் கொண்டார். (01)

# இலங்கையில் சமாதானம் உலகிற்குப் புதிய பாடம்

## பிரிட்டிஷ் பொப் இசைக்குழு கருத்து

(லண்டன்)

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளிலிருந்து உலகம் சமாதானப் பாடத்தைப் படிக்க வேண்டும் என பிரிட்டனின் பிரபல 'VB 40' பொப் பாடல் குழுவினர் தெரிவித்துள்ளனர். இக்குழுவினர் நேற்று முன்தினம் கொழும்பில் சமாதானத்தை வலியுறுத்தும் மிகப்பெரும் ஆடல், பாடல் நிகழ்ச்சியொன்றை நடாத்தினர்.

இரண்டு தசாப்த காலமாகப் போரில் மூழ்கியிருந்த இலங்கை இன்று அதிலிருந்து விடுபட்டுளளது. இங்கு இப்போது அச்சமின்றி எங்கும் செல்லலாம் என இக்குழுவினர் தெரிவித்துள்ளனர். அமெரிக்கா, ஈராக்கிற்கு எதிராகப் போரை ஆரம்பிக்கத் திட்டமிடுகிறது. இலங் கையின் தற்போதைய சமாதான நடவடிக்கைகள் அமெரிக்காவிற்கும் உலகிற்கும் எடுத்துக்காட்டாக அமையும் என இக்குழுவினர் தெரிவிக்கின்றனர்.

---

# சின்னஞ் சிறு செய்திகள்

### ஆஞ்சநேயர் கோவிலில் இலட்சார்ச்சனை

(மருதனார்மடம்)

மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவில் இலட்சார்ச்சனை 23 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து, 10 நாட்கள் நடைபெறவுள்ளது. மேற்படி பத்துத் தினங்களும் மாலை 5 மணிக்கு இன்னிசைக் கச்சேரியும் நடைபெறவுள்ளது.

### விபரம் அனுப்பக் கோரிக்கை

2002 டிசம்பர் மாதச் சம்பளப் பட்டியலில் உள்ளவாறு தங்கள் பாடசாலையில் உள்ள அதிபர், ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதவர்களின் விபரங்களை 24ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத் திட்டமிடற்பிரிவில் ஒப்படைக்கும்படி, யாழ்.வலயத்தில் உள்ள பாடசாலை அதிபர்களுக்கு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### தரங்கணிப்பு செயலமர்வு

ஆசிரியர் தரங்கணிப்பு தொடர்பான அதிபர்களுக்கான செயலமர்வு 18 ஆம் திகதி காலை 9.30ற்கு யாழ். வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இதன்போது சகல பாடசாலை அதிபர்களும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆசிரியர் தரங்கணிப்பு தொடர்பான அறிவுறுத்தல் கையேட்டையும், ஆசிரியர் தரங்கணிப்பு படிவம் ஒன்றையும் கொண்டு வரும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

### நூல்கள் அன்பளிப்பு

லண்டனில் இருந்து வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு அனுப்பப்படவுள்ள ஆங்கில நூல்கள் - பாடசாலைகளுக்கும், நூல் நிலையங்களுக்கும் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளதாக வலி. வடக்கு பிரதேசசபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (72)

### ஓமந்தையில் துப்பாக்கி வெடித்து சிப்பாய் காயம்

வவுனியா ஓமந்தை முன்னரங்கக் காவலரணில் கடமையாற்றிய சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததால் அவருக்குப் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் அபயகோன என்ற சிப்பாயை பலத்த காயத்துக்கு உட்பட்டவராவார்.

துப்பாக்கி தவறுதலாக நிலத்தில் வீழ்ந்தபோதே, இந்தச் சம்பவம் ஏற்பட்டுள்ளது.

### உலகப் பாரம்பரிய நகராக பொலநறுவை

உலகப் பாரம்பரிய நகராக பொலனறுவ பிரகடனம் செய்யப்பட இருக்கிறது. இதற்கான பூர்வாங்க ஆய்வு ஒன்றை மேற்கொள்வதற்கு என யுனெஸ்கோ ஸ்தாபனத்தின் தூதுக்குழு ஒன்று பொலனறுவைக்கு விஜயம் செய்துள்ளது.

பிரதான நகரான பொலனறுவையில் காணப்படும் வரலாற்றுச் சின்னங்களை பேணிக்காக்கும் முயற்சியில் மத்திய கலாசார நிலையம் ஒன்று தற்போது ஈடுபட்டுள்ளது.

### கல் வீசியவர்களை தட்டிக் கேட்டதற்கு கத்திக்குத்து

இரவு வேளையில் வீட்டின் மீது கற்கள் வீசப்பட்டதை தட்டிக் கேட்கச் சென்ற இளைஞன் கத்திக்குத்துக்கு இலக்கானார். கடந்த வெள்ளியன்று கரவெட்டி இராஜ கிராமத்தில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் ஸ்ரீ நாரத வித்தியாலய வீதியைச் சேர்ந்த ஆர்.கிருஷ்ணராஜா (வயது 26) என்ற இளைஞனே கத்திக்குத்துக்கு இலக்கானவராவார். (ச)

### சுத்தமின்றியிருக்கும் வைத்தியசாலை கழிப்பறை

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை வைத்தியசாலையில் உள்ள மலசலகூடம் உரிய முறையில் சுத்தப்படுத்தப்படாமையினால், அங்கு தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகள் பெருஞ்சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். (72)

# அடிப்படை வசதிகளின்றி சாவகச்சேரி ஆஸ்பத்திரி

(நாவற்காடு)

சாவகச்சேரி வைத்தியசாலை மலசலகூட அடிப்படை வசதிகளின்றிக் காணப்படுவதால், இங்கு வரும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். தினமும் இவ்வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவுக்குச் சுமார் 400 நோயாளர்கள் சிகிச்சைக்காக வருகின்றனர்.

இங்குள்ள குழாய்க் கிணறு சேதமடைந்துள்ளதால் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவுகிறது. அத்துடன் மலசலகூட வசதியும் இல்லை. நோயாளிகளுக்கான ஊசிமருந்துகளைப் பாதுகாத்து வைக்கக்கூடிய குளிரூட்டி வசதியின்மையால் தினமும் ஊசிமருந்துகள் கோப்பாய் வைத்தியசாலையிலிருந்தே எடுத்து வரப்படுகிறது.

இவ்வைத்தியசாலையில் ஒரு அம்புலன்ஸ் வண்டியின் சேவை போதுமானதாக இல்லாமையினால் இன்னுமோர் அம்புலன்ஸ் வண்டியைப் பெற்றுத்தருமாறு, டாக்டர் ச.அம்பிகைபாகன் - பிரதேச செயலரிடம் மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வைத்துக் கேட்டுக்கொண்டார். (92)

# ஏழு ரடார் கருவிகள் கடற்படை கொள்வனவு

(கொழும்பு)

இலங்கைக் கடற்படையைப் பலப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகின்றது.

இதன் பிரகாரம் கடற்படையின் ரோந்துப் படகுகளில் பொருத்தப்பட 7 அதிநவீன ரடார் கருவிகள் கொள்முதல் செய்யப்படவுள்ளது.

இந்தக் கருவிகளைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை முன்பு அங்கீகாரம் வழங்கியிருந்தது. இப்போது இந்தக் கருவிகளைக் கொள்முதல் செய்வதால் 22 லட்ச ரூபா அரசாங்கத்திற்கு லாபமாக உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

# பிளாஸ்ரிக் கூரைப்படங்குகள் கரவெட்டியில் விநியோகம்

பருத்தித்துறை, கரவெட்டிப் பகுதியில் வன்னியிலிருந்து வந்து மீளக்குடியமர்ந்த மக்களுக்கு ஊற்று நிறுவனம் பிளாஸ்ரிக் கூரைப்படங்குகளை விநியோகித்து வருகின்றது. கடும் மழையினால் இவர்களது குடியிருப்புக்கள் பாதிக்கப்பட்டதையடுத்தே கூரைப்படங்குகளை வழங்க ஊற்று நிறுவனம் நடவடிக்கை எடுத்தது. (92)


## வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

நான்காவது அகவையில்



பெயர் :ஞா.கீர்த்தனா
முகவரி:இளவாலை வடக்கு, இளவாலை.

ஆறாவது அகவையில்



பெயர் : கி.சிவகிருபன்
முகவரி: மாரியம்மன் வீதி, திருநெல்வேலி.

ஆறாவது அகவையில்



பெயர் : கு.பூர்வஜா
முகவரி: வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

ஏழாவது அகவையில்



பெயர் :சி.அர்ச்சனா
முகவரி:C.P.M. வீதி, யாழ்ப்பாணம்.

எட்டாவது அகவையில்



பெயர் : ச.அனுஜன்
முகவரி: காலையடி, பண்டத்தரிப்பு.

ஒன்பதாவது அகவையில்



பெயர் :ம.அனுசனா
முகவரி:16, செம்மணி வீதி, நல்லூர்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------------

முகவரி:------------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்


# குட்டியப்புலம், சுதந்திரபுரம் பகுதிகளில் மீள்குடியமர்வுக்கு படையினர் தடை!

## அப்பகுதி மக்கள் கவலை தெரிவிப்பு

(ஊரெழு)

குட்டியப்புலம், சுதந்திரபுரம் பகுதிகளிலும் மக்கள் மீள்குடியேற்றம், விவசாயச் செய்கை, புதிய வீடுகளை நிர்மாணிப்பது தொடர்பாக - படைத்தரப்பு தடைகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளதாக, அப்பகுதிமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த 11ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் வந்த சுமார் 20 இராணுவத்தினர்,

அப்பகுதி மக்களிடம் புதிதாக வீடுகளை புனரமைப்பு செய்ய வேண்டாம் எனவும் மீள் குடியேற்றம் மற்றும் விவசாய நடவடிக்கைகளை அனுமதி இன்றி மேற்கொள்ள வேண்டாம் எனவும் எச்சரிக்கை விடுத்துச் சென்றனர்.

மேலும் வீடுகளுக்கு இலக்கங்கள் இட்டதுடன், உயர்பாதுகாப்பு வலயம் எனக்கூறி சிவப்பு நிறக் கம்பங்களையும் நட்டு எல்லைப்படுத்திச் சென்றுள்ளதாகவும் மக்கள் மேலும் தெரிவித்தனர். (96)

# சாதாரணதரப் பரீட்சைக்கு மீண்டும் எட்டுப் பாடங்கள்

## கல்வி அமைச்சு ஆலோசனை

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு மீண்டும் எட்டுப்பாடங்களை அறிமுகப்படுத்துவதற்கு கல்வி அமைச்சு ஆலோசனை செய்து வருகின்றது.

சிங்களம் அல்லது தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சுற்றாடற்கல்வி, வரலாறு, சமயம் ஆகிய பாடங்களை அமுல்படுத்துவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது 10 பாடங்களில் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி வருவதால், அவர்களுக்குப் பெரும் சுமையாகவுள்ளது என்று அமைச்சுக்குச் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே, இந்த நடவடிக்கையில் அமைச்சு ஈடுபட்டுள்ளது.

இந்த எட்டுப்பாட கல்வித்திட்டத்தை ஏற்றுக் கொள்வதா? விடுவதா என்று நாடாளுமன்ற தெரிவுக்குழு தீர்மானிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# இந்தவாரம் தொடர்ந்தும் மழை வளிமண்டல திணைக்களம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இந்த வாரமும் தொடர்ந்து மழை பெய்யும் சாத்தியக் கூறுகள் இருப்பதாக யாழ். வளிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ளது.

குளிர்காற்றுடன் தொடர்ந்து மழை பெய்யும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வெள்ளிவரை 1,401.3 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதாகப் பதிவாகியுள்ளது.

கடந்த இரு வாரங்களாக தொடர்ந்து பெய்துவரும் மழையினால் - குடாநாட்டிலுள்ள வீதிகள், வ்யல்களில் வெள்ளம் பாய்ந்து வருகின்றது.

குடாநாட்டிலுள்ள பெரும்பாலான வீதிகள் குன்றும் குழியுமாக இருப்பதனால், குழிகளில் தேங்கியிருக்கும் வெள்ளத்தில் வாகனங்கள் செல்வதனால், வீதிகளில் செல்வோர் அசௌகரியங்களை எதிர்நோக்கியும் வருகின்றனர். (ச)

## வலி. வடக்கு அபிவிருத்தி கலந்துரையாடல்

(மல்லாகம்)

வலி வடக்கு பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் இன்று மாலை 2.30 மணிக்கு அளவெட்டி பொதுநூலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் தமிழர் விடுதலை கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி கலந்து கொள்ளவுள்ளார்.

இப்பிரதேசத்திலுள்ள சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள், பாலர்பாடசாலை ஆசிரியர்க்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பிரதேசசபைத் தலைவர் திருமதி.பா.ஶ்ரீபாஸ்கரன் கேட்டுள்ளார். (68)

# மகப்பேற்று நிலையங்கள் புனரமைக்க நடவடிக்கை

இராணுவ நடவடிக்கை காரணமாக அழிவடைந்த நிலையில் காணப்படும் இரண்டு மகப்பேற்று நிலையங்களை புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

யாழ்.மாநகரப் பகுதிக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள இரண்டு மகப்பேற்று நிலையங்களே புனரமைப்புச் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது.

குருநகர், பொம்மைவெளி ஆகிய பகுதிகளில் உள்ள மேற்படி இரண்டு மகப்பேற்று நிலையங்களும், கடந்தகால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மிக மோசமாகப் பாதிப்படைந்து காணப்படுகின்றன.

அடுத்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி மூலமாக, மேற்படி மகப்பேற்று நிலையங்களைப் புனரமைப்பதற்காக தற்போது திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (க)

# வீதி திருத்த பறிக்கப்பட்ட கல் போக்குவரத்துக்கு இடையூறு

(வடமராட்சி)

திருத்த வேலைகளுக்காக மாலு சந்திப்பகுதியில் பறிக்கப்பட்டுள்ள கற்களினால் அவ்வீதியூடாகச் செல்லும் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

இவ்வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமையால் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால், தொடர்ந்து பெய்துவரும் மழையினால் குழிகளில் நீர் நிரம்பியுள்ளது.

அத்துடன், வீதியின் அருகே பறிக்கப்பட்ட கற்கள் வீதியில் சிதறிக் காணப்படுவதால் வாகனப் போக்குவரத்துக்கு இடையூறாகவுள்ளது.

வாகனங்கள் விலகிச் செல்லும் சந்தர்ப்பங்களில் - ரெலிகொம் நிறுவனத்தினால் வெட்டப்பட்ட குழிகளில் வாகனங்கள் புதைவதால் விபத்துக்களும் ஏற்படுகின்றன. (ச)

# வடபகுதி புனரமைப்புப் பணிக்கு 20 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், மன்னார், வன்னி, ஓமந்தை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்படவிருக்கும் அகதிகளுக்கான அபிவிருத்தி நடவடிக்கைக்கு 20 கோடி ரூபாவை புனர்வாழ்வு மீள்குடியேற்ற அமைச்சு ஒதுக்கியிருக்கிறது.

ஓமந்தையில் இருந்து பரந்தன் வரைக்குமான புதிய வீதியின் திருத்த வேலைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவிருக்கிறது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளும் திருத்த வேலைகளுக்கு மேலதிகமாக, யாழ்ப்பாணப் பொதுநூலக புனரமைப்புக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

# A-9 என நீளும் நினைவுகள்

**பகுதி பத்து**

சந்தித்து நிதம் பேசிச் சிரித்ததும்,
தனித்துக் காதலோடூடலுஞ் செய்ததும்,
எந்த வேளையும் பிரியோம் என அன்பில்
இணைந்ததும், இதோ...... தாலி கட்டே மீதி
என்றிருந்ததும் இடறிற்று ! 'கீழ்த்திக்கில்'
நின்ற வானரம்..... மணமக்கள் மாலையைத்
துண்டு துண்டாய் அறுத்து எறிந்ததால்
'சொர்க்கவாசல்' சுடலையென்றாயிற்று !



சின்னச் சின்னப் பிரச்சினைகள், கல்லுக்
குத்தல்கள், என வந்த விபரீதம்
கண்ணிமைப்புள்ளொரு பூதமாய்க்
கவிந்ததெங்கள் கிழக்குக் கரையிலே!
'ஒன்றுபட்டுமே காணலாந் தீர்வினை'
ஒலித்த குரல்களை... உதாசீனஞ் செய்திட்ட
வன்னின வாதம் வாளினைத் தூக்கு முன்
'வனப்புதல்வர்கள்' கவசமாய் மாறினர்.

'இரண்டாங்கட்டத்து ஈழப்போராம்' என
எட்டுத்திக்கும் முரசு அதிர்ந்தது!
விரித்த மொட்டாய் உயிர்பெற்ற தேசத்தை
விழுந்த குண்டுகள் மூசிக்குதறின.
பரவிப் போரனல் வடக்கின் மடியையும்
வதைத்தது; இந்த A-9 வீதியில்
இருந்த போர் முகம் யாவிலும் கந்தக
இடி விழுந்தது; வாழ்வு வரண்டது

ஜெயங்கொண்டான்

# ஊரிலிருந்தெழும் பாடல்

நெடிதுயர்ந்து பின்
தலை கவிழ்ந்து
நிழல் வளர்க்கிறது.
நிழலின்றி மறைந்து
தோன்றி மறைந்து
தொடர்ச்சியாய் அது
நிகழ்கிறது.
ஊர்க்குருவி
சிறகுகளை விரிக்கிறது
ஊமையின் பாடலாய்
அது இருந்து
விடுகிறது, சனங்கள்
திரும்புகிறார்கள்
நகர் நோக்கி
ஊரிலிருந்தெழும்
பாடல்கள் எதுவும்
உண்மையாயில்லை.
வான் மீதேறி
இறங்கும்
வெண்முகிற் கூட்டம்
காற்றழுத்தத்தால்
நகர்கிறது.
வேறிடம் நோக்கி
அடிக்கடி அலை
எழுந்தடித்து - பின்
ஓய்கிறது, நுரை
கக்கியபடி
இப்பொழுது இங்கு
மழையுமில்லை
வெயிலுமில்லை
இடியும் இல்லை
புயலுமில்லை - ஆனாலும்
வெறுமை இன்னும்
ஏன் என்மனதில்...
விடைதெரியாத
வினாவாய்...

யாத்திரீகன்




# பாடுபொருள் புதிதாக இருப்பதே புதுக்கவிதை

**விக்கிரமாதித்தியன் - தமிழ் உலகம் பேர் சொல்லவல்ல ஒரு கவிஞன். வாழ்க்கையை இயல்பு மாறாமல் நுண்ணியதாய்ப் பார்ப்பவர். சர்ச்சைக்குள்ளானாலும் இவரது படைப்புக்கள் சாமான்யமானவையல்ல.**

**புதுக்கவிதை பற்றி கவிஞர் திருமேனியின் கவிதைகளூடு அவரது பார்வை இதோ..**

வாழ்வுக்குப் பல சாயல்கள். பல பரிமாணங்கள். பல தன்மைகள். அதுதான் அது சுவாரஸ்யமாக இருக்கிறது. மர்மம் கொண்டிருக்கிறது. புதிராக விளங்குகின்றது. நல்ல கலைஞன் இதையெல்லாம் உணர்ந்து கொள்கிறான். உணர்ந்து அதிசயித்து உலகுக்குச் சொல்ல வருகிறான். இதனால்தான் ஒவ்வொரு படைப்பும் ஒவ்வொரு விதமாக அமைகிறது. வேறு வேறு வகையாக வித்தியாசப்படுகிறது.

ஒன்றைப் பார்த்து ஒன்று செய்ய ஒப்பாது கலைஞன் மனசு. நகலெடுப்பது குமாஸ தாவுக்குச் சரி, படைப்பாளிக்கு ஆகாது. இப்படித்தான் புதிய படைப்பு தோன்றுகிறது. படைப்பு என்பதே புதியதுதான். தன் உலகைத் தானே உண்டு பண்ணும் இலக்கியவாதியே உயர்ந்த இலக்கியவாதி. மேலான எழுத்துக்களெல்லாம் சுயம்புவானவை. உன்னத இலக்கியவாதிகள் எல்லோருமே அசலான கலைஞர்கள்தாம்.

புதிது காணவே நவீன கவிதை ஏற்பட்டது. புதிது சொல்லத்தான் உண்டானது. வடிவத்தில் புதுமை செய்வது பெரிதில்லை. பாடுபொருள் புதிதாக இருப்பதே உண்மையான புதுக்கவிதை. புதிய விஷயங்களாலேயே கவிதையின் எல்லை விரிவடைகிறது. பரப்பு விஸ்தீரணம் பெறுகிறது. படைப்பு அர்த்தம் உள்ளதாகிறது. அது பரவசம் விளைவிக்கிறது. விஷயப் புதுமைகளாலேயே மொழியும், இலக்கியமும் ஆக்கம் கொள்கின்றன. நவீனமாக எழுதுபவனே நல்ல கவிஞன்.

சங்கப் பாடல்களிலிருந்து நவீனமானவை காவியங்கள். காவியங்களிலிருந்து புதுமையானவை பக்தி இலக்கியம். பக்தி இலக்கியத்திலிருந்து வேறுபட்டது சிற்றிலக்கியம். அதிலிருந்து வித்தியாசமானவை தனிப்பாடல்கள். காலந்தோறும் மாற்றமடைந்தே வந்திருக்கிறது தமிழ்க் கவிதை. பாரதியிலிருந்து ந.பிச்சமூர்த்தி கவிதைகளாக, ந.பிச்சமூர்த்தியிலி



ருந்து சமகால நவீன கவிதை வரை.

வடிவமாற்றம் - புறமாற்றம் மட்டுமே. அதைப் பெரிதாக எண்ணுவதில்லை தமிழ்மரபு. விஷயங்கள் மாற்றம் கொள்வதே விஷயம். சங்ககாலத்தில் கவிதை உணர்வுக் கீற்றுகளாக இருந்த தென்றால், காவிய காலத்தில் கதை வழியே கருத்தென்று ஆனது. பக்திக் கால இலக்கியம் மனிதப்பிறவியின் உய்வுக்காகச் சிவனையும், திருமாலையும் ஊனுருக உளமுருகப் பாடியது. தெய்வத்தை, மன்னனை நாயகர்களாக்கிப் போற்றியது, சிற்றிலக்கியம். பாடுபொருளையே அருமையாகக் கருதி வந்திருக்கிறது தமிழ் மனம். அதற்கேற்ப வடிவம் புனைந்து கொண்டது. விஷயம்தான் உயிரே. வடிவம் தன்னைப்போல அமையும்.

சங்கக் கவிதையின் உருவத்தையும் கட்டமைப்பையும் விடவா? விஷயம் இல்லாத வித்தகம் (Style) வீண். விஷயமும் வித்தகமும் இசைந்திருப்பதே விசேஷம். விஷயம், வித்தகம் இல்லாதது. அதற்கே உரித்தான குணாதிசயம் உள்ளது. வித்தகம் தொழில்நுட்பம் - செய்நேர்த்தி சார்ந்தது. இழைத்து இழைத்துச் செய்யப்படுவது. ஏராளமான விஷயம் சொல்ல இருக்கையில் யாராவது இழைத்து இழைத்துச் செய்து கொண்டிருப்பார்களா. இப்படிச் செய்வது சுலபம். பயிற்சியில் வரும். விஷயம் அடைபடுவதுதான் கஷ்டம். அதுக்குப் புலன்கள் உக்ரம் கொள்ள வேண்டும். இன்றைய கவிதையில் பாடுபொருளைக் காட்டிலும் வித்தகம் பிரதானமாகப் போனது ரொம்பவும் துரதிர்ஷ்டவசமானது.

திருமேனி என்கிற இளங் கவிஞரின் கவிதைகள் விஷயமும் வித்தகமும் இணைந்திருப்பவை. புதிய விஷயங்களாகவோ புதிய முறையில் சொல்பவையாகவோ அமைபவை. காலங்காலமாக இருக்கிற காதலைக் கூடப் புதுமையாகப் பேசுபவை. வடிவமும் கட்டமைப்பும் உத்தியும் சீராகக் கூடிக்கலந்தவை. உள்ளபடியே நவீன கவிதைகள்.

இவர் அதிகம் எழுதுகிறதில்லை. அப்படி எழுதியவற்றையும் பிரசுரத்துக்கு அனுப்புவதில் ஆர்வம் காட்டுவதில்லை. பத்திரிகைகள் வெளியிடுவது வேறு கதை. *(அடுத்தவாரம் தொடரும்)*

# உலக இலக்கிய அரங்கில்..

## எழுத்தாளரின் தற்கொலை

இந்திராணி ஜக்கத் கியால்ட் சென் என்ற இந்தியப் பெண் எழுத்தாளர் தற்கொலை செய்து கொண்டார். அதன் காரணம் இப்பொழுது அம்பலத்துக்கு வந்துள்ளது. உலகம் முழுவதும் தனக்கு ஏற்படப் போகும் அவமானத்திலிருந்து தப்பவே அவர் தற்கொலை செய்து கொண்டாரா? என்ற கேள்வி உலக இலக்கிய உலகில் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகிறது.

அவரது இரண்டாவது நாவலான "கொக்குகளின் காலை நேரம்" என்ற நாவல் வேறு ஒரு நாவலைத் தழுவி எழுதப்பட்டதாம். 1956ல் எலிசபெத் கூட்சே என்பவர் எழுதிய "ரோஸ் மேரி டிரீ" என்ற நாவலை இந்தியப்படுத்தி அப்படியே எழுதப்பட்டதாம். இதில் வேடிக்கை என்னவெனில் 1956 ல் வந்த மூல நாவலை "இது ஒரு சாதாரண சரக்கு" என்று நியூயோர்க் ரைம்ஸ் நிராகரித்திருந்தது. அதைத் தழுவி எழுதப்பட்ட நாவலுக்கு நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை பாராட்டுத் தெரிவித்துள்ளது.

புகழ்பெற்ற இந்திய எழுத்தாளர் எப்படித் தழுவி எழுதத் துணிந்தார் என்பது இன்றளவும் புதிராகவே இருக்கின்றது.

## உச்ச விற்பனை நாவல்

1960ல் கார் விபத்தில் அல்பர்ட் காமு மரணமடைந்தார். அப்போது அவருக்கு வயது நாற்பத்தாறு. நவீனகால மாபெரும் படைப்புக்கள் என்று கருதப்படுபவை அவருடைய 'தி ஸ்ட்ரேஞ்சர்', 'தி பிளேக்', 'தி ஃபால்' போன்ற நாவல்கள்.

முப்பத்துநான்கு வருடங்களுக்குப் பின்பு அவரது மகள் காதரீன் தந்தையின் நாவல் ஒன்றை வெளியுலகுக்கு கொண்டு வந்துள்ளார்.

நாவலின் பெயர் "முதல் மனிதன்". அல்ஜீரிய சேரிகளில் சிறுவனாக அவர் பசியும் பட்டினியுமாகச் சுற்றி அலைந்தது. தகப்பன் இல்லாத, காது கேளாத, படிப்பறிவில்லாத தாயுடன் வாழ்ந்தது, ஒரு ஆசிரியரின் வழிகாட்டலில் அவர் புத்திஜீவியானது என்று நிகழ்வுகள் இந்த நாவலில் இடம்பெற்றுள்ளன.

வெளியான இரண்டு வாரத்தில் இந்தப்புத்தகம் பிரான்சில் உச்ச விற்பனையை அடைந்தது. இதனை மொழிபெயர்க்க பதினாறு அயல் நாட்டுப்பதிப்பகங்கள் முட்டி மோதிக்கொண்டன.

- மணிசேகரன்

# வாங்கு

## சிறுகதை

### கோகுலராகவன்

எங்களுக்கு வாங்கு எப்பவும் ஓடும் ஒரு பஸ் மாதிரி. கண்ணன் நடத்துநர்; ரமணன் அல்லது நான் சாரதி; அயல் வீட்டுப் பொடியள் பயணிகள்; பழைய பேப்பர் துண்டுகள் தாள்காசு; சில்லறை கிடையாது. சும்மா மணிக்கு 150 மைல் வேகத்தில் ஓடக்கூடியது எங்கள் பஸ்; சிலவேளை விழுந்து கிடந்து தான் மறிக்க வேண்டும். ஒரு பத்துப் பேரைத்தான் ஏற்றலாம். என்றாலும் அது தலைவாசல் வீட்டை விட்டு வெளியே ஓடிய தில்லை. நல்ல பஸ்.

அப்பா கல்வீடு கட்ட முன் எங்களுக்கு மூன்று வீடுகள் இருந்தன. பெரிய வீடு, குசினி மற்றையது தலைவாசல். பெரியவீடு - படுக்கை அறை, அத்துடன் வைப்புச் செப்பு அறையும் கூட, குசினி, குசினிதான். தலைவாசல், வரவேற்பு மண்டபம் மற்றும்படி எங்களுக்கு உள்ளக விளையாட்டு மைதானம். தாயம், ஆடுபுலி ஆட்டம், நாயும் புலியும், ஆள் குறைஞ்சா டக்டிக் டோஸ், கொஞ்சம் வளர்ந்த பின் காட்ஸ், படித்ததெங்கே பண்ணிய தெல்லாம் இதுதானே.

தலைவாசலுக்குள் வருபவர்களுக்குப் பாய் போடுவார்கள். ஆண்கள் என்றால் எங்கள் பஸ்சில் இருந்து கொள்வார்கள். எங்களது பிரயாணம் குழம்பி விடும். வீட்டில் ஒரு கதிரை இருந்ததாக ஞாபகம். அதற்குச் "சிங்களக் கதிரை" என்று பெயர். எப்பவும் சிங்களக் கதிரை பிரச்சினைக்குரியதுதான். ஆர் அதிலை இருக்கிறது. கண்ணன் முந்திவிடுவான். அதிகாரம் அவனுக்குத்தான். மூத்த பிள்ளை. எனக்கும் ரமணனுக்கும் வாங்குதான்.

திடீரென்று சிங்கள கதிரையின் மவுசு குறைந்து விட்டது. என்ன வென்றால்- பக்கத்து வீட்டு பவளம் மாமியின் தகப்பன், அம்மாவின் வல்லிபுரக்குஞ்சி, கொஞ்சம் உயரமான மனுசன், நல்லெண்ணைக் கறுவல். யாரோடையோ கோவித்துக்கொண்டு மருந்து குடித்து செத்துப் போக, வைத்துக் குளிப்பாட்ட சிங்களக் கதிரையைக் கொண்டு போனார்கள். அதற்குப் பிறகு, சிங்களக் கதிரை கேட்பாரற்று கிடந்தது. கிடந்து கொண்டே இருந்தது. பிறகு வாங்குதான் எல்லாம். எங்களது படிப்பு மேசையும் வாங்குதான். மூன்று பேரும் ஒருங்கே ஏறியிருந்து படிக்கத் தாராளமாகக் காணும். 7 அடி நீட்டு, 5 அடி அகலம். தலைமாட்டினில் 1 அடி அகலத்தில் பெரிய பெட்டி. அதன் பெயர் வாங்குப்பெட்டி.

வாங்குப்பெட்டிதான் எங்கடை புத்தகப் பெட்டி. மூன்றாகப் பிரித்து புத்தகங்களை வைப்போம். இதில் ஒரு இலாபம் இருந்தது. சித்திரை விடுமுறை, ஆவணி விடுமுறை, மார்கழி விடுமுறைகள் முடிய அம்மாவை,

"என்ரை தமிழ்ப் புத்தகத்தை கண்டியளோ'' என்று கேட்கத் தேவையில்லை.

ஒரு முறை என்னுடைய சுற்றாடல் புத்தகத்தை தேடிக் கிடைக்காமல் விட்டுவிட, வேய்வதற்கு பிடுங்கிய வீட்டு முகட்டினில் கிடந்ததாக ஞாபகம். ஐந்தாறு எலி சேர்ந்து இழுத்துக் கொண்டு போயிருக்கும். ஒவ்வொரு விடுமுறைக்கும் பத்திரமாக வாங்குப் பெட்டிக்குள்ளே சேமித்து வைப்போம். பள்ளிக்கூடம் தொடங்கேக்கை எடுக்கத்தானே வேண்டும். நாங்கள் படித்ததைவிட, வாங்குப் பெட்டி அதிகம் படித்திருக்கும். பாவம் பரீட்சை எழுத யாரும் கேட்கவில்லை.

வாங்குக்கும் எங்களுக்கும் தொடர்பு அதிகம்தான். கண்ணன் ஆறாம் வகுப்பு படிக்கப்போக, 1981 இல் அப்பா புதிதாய் ஒரு கொம்பாஸ் வாங்கிக் கொடுத்திருந்தார். அன்றுதான் முதன்முதலில் கொம்பாஸ் பெட்டியைப் பார்த்தோம். T.V பார்ப்பதுபோல சுற்றிச் சுற்றிப் பார்த்துக் கொண்டு இருந்தோம். அதில் ஒரு உபகரணம் என்னத்துக்கு பாவிப்பது என்றே எங்கள் மூவருக்கும் தெரியவில்லை.



மாமா அப்ப O/L படித்துக் கொண்டிருக்க வேண்டும். அவர் வந்தபோது காட்டினோம். அவர் வாங்கில் ஒரு வட்டம் வரைந்து, அதற்குள் பல அரை வட்டங்கள் வரைந்து ஒரு பூப்போல ஆக்கினார். வாங்கில் நிரம்ப அழகாக அதுவந்தது. 2000 த்தில் இடம் பெயரும்போதும் அது அப்படியே இருந்துகொண்டிருந்தது.

கிட்டத்தட்ட நான் O/L எடுக்கும்வரை அதில் கதிரையைப் போட்டுக்கொண்டு படிப்பேன். அண்ணன்களும் அப்படித்தான் படித்தார்கள். கண்ணன் கம்பஸ்சுக்கும் படிக்கப்போனான்.

"கதிராமற்றை வாங்கில்லாட்டா எனக்கு கம்பஸ் இல்லை'' என்று அடிக்கடி சொல்வான்.

யார் கதிர்காமர்? அம்மாவின் தகப்பனின் தகப்பன் காலத்து வாங்குதான் அது. அம்மப்பாவின் தகப்பன்தான் கதிர்காமர். கதிர்காமர் என்கின்ற எனது கொள்ளுப் பேரனின் வைப்புச் செப்பு எல்லாம் இந்த வாங்குப் பெட்டிதான். இந்த கதிர்காமர் இறந்த அன்று வாங்குப் பெட்டி பூட்டி இருந்திருக்கு. ஒரு மருமகன் அந்நாளில் 1000 ரூபா வரை செலவளித்து விட்டு வாங்குப் பெட்டியை உடைக்க உள்ளே இருந்தது வெறும் 25 ரூபா மட்டும் தானாம். அம்மப்பா வேடிக்கைப் பேர்வழி. சொல்லிச் சிரிப்பார்.

நாங்கள் 9 மணியளவில் படித்து முடிய அம்மப்பா தங்கள் வீட்டிலிருந்து எங்கள் வீட்டிற்கு படுக்க வருவார். படுப்பது தகப்பனின் வாங்கில். சடபுட சடபுட என்று அடித்த படி படுப்பார்.

ஒரு கனவு காணும் பேர்வழி, ஒருநாள் கனவு கண்டு வாங்கில் இருந்து உருண்டு கீழே விழுந்து விட, அம்மா எழுப்பிக் கேட்க,

"உவன் சின்னத்தம்பி வெட்ட வந்தான், அதுதான் உருண்டு போனன்''

- சின்னத்தம்பி காணிப் பங்குக்காரன்.

எங்களுக்கு வாங்குப் பெட்டி ஒரு பூசை அறையும்கூட, ஒவ்வொருவரும் புத்தகம் வைக்கும் பகுதிக்குள் எமக்கு அப்பப்ப வரும் தீபாவளி, பொங்கல் வாழ்த்துப் படங்களை ஒட்டி வைப்போம். வோட்டர் கலரால் அவுட் கொடுத்து நிரம்ப அழகாக இருக்கும். வருஷம் வருஷம், புதுப்புதுப் படங்கள் ஒட்டுவோம்.

இப்படியிருக்க, நான் எட்டாம் வகுப்பு படிக்கையில் ஏழாம் வகுப்பு படிக்கும் தபால் பீயோன் பொன்னுத்துரை மாமாவின் மூத்த மகள் சாந்தி எனக்கு ஒரு தீபாவளி வாழ்த்துப் போட்டுத் தொலைத்தாள். கிருஸ்ணன் இராதைப்படம். கெட்டது குடி.

வெறும் வாயை மெல்லும் கண்ணனும் ரமணனும் சும்மா இருப்பார்களா. பவுல்கம் கிடைத்த மாதிரி.

"பள்ளிக்கூடம் விட அங்கை போயிடுவியளோ, இஞ்சை வருவியளோ?''

நான் கொஞ்சம் அடக்கி வாசிக்க வேண்டியதாகி விட்டது. சிலவேளை சாந்தியின் தகப்பன் கடிதம் கொண்டு வந்தால்-

"கொம்மான் கடிதம் கொண்டு வந்தவர்''

நான் கொஞ்ச நேரம் யோசிக்க வேண்டியிருக்கும். பிறகு ஈ....ஈ... என்று சிரிப்பார்கள்.

''மாமன் பென்சன் எடுக்கேக்கை மருமோனுக்கு இந்த வேலையை கொடுப்பாங்களாம்''

நான் கண்ணை மூடி காக்கிக் காற்சட்டை சேட்டோடு, பெரிய தொப்பியுடன், முன்னுக்கு பெரிய கரியல் சைக்கிளுடன் கற்பனை பண்ணிப் பார்த்தேன். ம்கூம்... சகிக்க முடியவில்லை.

கதை பள்ளிக்கூடத்துக்கும் பரவியது. பள்ளிக்கூடத்தில் இது சகஜம். ஆனால் என் கதையோ ஏனோ எனக்கெதிராக வந்துவிட்டது. இவளுக்கு வாழ்த்துப் போட வேறு ஆட்கள் கிடைக்கவில்லையோ? பொடியள் எடுத்ததற்கெல்லாம் தீபாவளி வாழ்த்தைக் காட்டி, ஆளடக்கி விடுவார்கள். சனியன், மூதேவி கலவாய்க் குருவி- சாந்தி ஒரு நெடுகக் கதைக்கும் பேர்வழி. இதற்கு பிறகு சாந்தியும் நானும் கிளின்ரன்-மோனிக்கா மாதிரி எதிரும் புதிரும் ஆகிவிட்டோம்.

பிறகு, அண்ணன்கள் மறந்த பின்னர்- வாங்குப் பெட்டிக்குள் ஒரு படம் ஒட்ட வேகன்ஸி இருந்தது. அந்தப் படத்தை எடுத்து அதற்கு ஒட்டி நீலத்தால் அவுட்லைன் கொடுத்து விட்டேன். எழுப்பமாக இருந்தது. பின் நாளில் எங்கள் வீட்டுக்குப் பூ ஆய வந்த சாந்தி அந்தப் படத்தைப் பார்த்துச் சிரித்துவிட்டுப் போனதாகக் கேள்வி.

நாட்கள் நகர, எங்களுக்கும் வாங்குக்கும் இடையில் தொடர்பு குறைந்து விட்டது. படிக்கும் மேசை மாறிவிட்டது. எப்பவாவது பகலுக்குப் படுத்து நித்திரை கொள்ளுவோம். பக்க அறையில் இருந்து நல்லகாற்று விழும்.

வாங்குப் பெட்டிக்குள் சாவிகளும், ரோச் லயிற்றும் இருந்தன. ஒட்டிய படங்கள் எல்லாம் கிழிந்து விட்டன. எப்படிக் கிழிந்தன என்று தெரியவில்லை. அதைப்பற்றி கவலைப்படவும் இல்லை. அந்தப் பிராயம் முடிந்து விட்டது. சாந்தி திருமணம் முடித்து லண்டனுக்கோ, பிரான்ஸிற்கோ போய்விட்டாள். வெறும் தீபாவளி வாழ்த்து எல்லாவற்றையும் நிர்ணயிக்குமா என்ன?

2000த்தில் தென்மராட்சியை விட்டு ஓடவேண்டி வந்தது. ஊரை விட்டு ஓடுவதென்றால் எத்தனை பெரிய விசயம். பிறந்து, தவழ்ந்து வளர்ந்து, வாழ்ந்த ஊரை விட்டு ஓடிவந்து விட்டோம். வாழ்க்கை என்றால் சில தியாகங்கள் செய்யத்தான் வேண்டும். அதுவும் போராட்டம் நிகழும் நாளல்லவா?

தென்மராட்சியில் கடும் சண்டை நடந்து முடிந்து விட்டது. இருந்த இடம் தெரியாமல் ஊர் அழிந்து விட்டது. எங்கள் வீடு என்னவாகியிருக்கும் என்று தெரியவில்லை. ஏக்கத்திலேயே வாழ்க்கை முடிந்து விடும் போலப்பட்டது.

ஒருநாள் வீடு பார்க்க விட்டார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை போய், அங்கிருந்து கொடிகாமம் வந்து, பிறகு தென்மராட்சிக்கு வந்தோம். இப்படி தொடும் மூக்கை, அப்பிடித் தொட்ட கதை.

வீட்டுக்குள் நானும் அப்பாவும் கால் வைத்தோம். காடுபத்தி கிடந்தது. கால் வைக்க, கால் கூசியது. எமது வீடே எம்மை பயமுறுத்தியது. வீட்டுக்குள் எல்லாம் தாறுமாறாய்க் கிடந்தன. நடுவீட்டுக்குள் இரண்டு கல்லை வைத்து கக்கூஸ் இருந்திருக்கிறார்கள். குசினிப் பக்கம் இடிந்து விழுந்து கிடந்தது. அப்பாவின் முகம் இருண்டு இருந்தது.

சின்ன அறைக்குள் வாங்கைக் காணவில்லை. வெளியே வந்து பார்த்தேன். வீட்டுக்குப் பின்னால் சமைத்திருக்கின்றார்கள். விறகுகள் கொத்தப்பட்டுக் கிடந்தன. கிட்டப் போய்ப் பார்த்தேன். வாங்கின் பலகைகள் இருப்பது போலப்பட்டது. அடுப்புக்கு விறகில்லாமல் வாங்கைக் கொத்தி எரித்திருக்கிறார்கள். ஒரு காலும் ஒரு பலகையும் எஞ்சிக் கிடந்தன.

இப்போது எனது முகம் இருள்வது எனக்கு உணரும்படியாக இருந்தது. எங்கள் பரம்பரையே அழிந்துவிட்டது போலத் தோன்றியது. இனி எஞ்சப்போவது தான் என்ன. சைக்கிள் கரியலில் காலையும், பலகையையும் வைத்துக் கட்டினேன். பலகை வாங்குப் பெட்டியின் உட்பலகை. உற்றுப் பார்த்தேன், அதில் தீபாவளி படங்களுக்கு போட்ட நீல அவுட் லைன் நன்றாகத் தெரிந்தது.

புறப்பட்டோம். அந்தக் காலங்களில் நாங்கள் ஆனந்தமாக வாழ்ந்த வீடு, எங்களை வழியனுப்பிக் கொண்டு இருந்தது. அந்தக் காலங்களில் நாங்கள் ஆனந்தமாக ஏறி விளையாடிய வாங்கின் ஒரு காலையும், ஒரு பலகையையும் மாத்திரந்தான் என்னால் காப்பாற்ற முடிந்தது. ✲

# அணையாத!!! தீபமே!!!

இதயத்து ஒலியிலும்
ஒவ்வொரு ஜீவனிலும்
அணுவிலும் ஆத்மாவிலும்
அன்னையவளின் அன்புச் சுவடுகள்..

ஊனதனை உருக்கி...
உதரத்தில் சுமந்து
ஊனுறக்கமின்றி
உதிரத்தை உவந்து
உன்னை, என்னை
உயர்த்திட உறவின்
ஏணிப்படிகளாய் நின்று
ஏற்றந்தந்தவள் ...



தாகம் வேண்டுகையில்
ஜீவ நதியாய்...
தவழ்ந்திடும் தென்றலில்
தலையணைத் தாலாட்டாய்
மோகந் தருகையில்
மோதிடும் கடலலையாய்
தேடிடும் பொழுதினில்
தேனினுமினிய தமிழாய்
அனைத்திலும் அவளே..
அணைந்திடா அகல்விளக்காய்..
அன்னையின் உறவே..
அணையாத தீபமாய்!!

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

மக்களுக்கானதே அரசாங்கமன்றி, அரசாங்கத்துக்காக மக்களல்ல.

*- ஹென்றி லஹர்.*

# நமது நோக்கு

## அமைதி அச்சுறுத்தல் வலயங்கள்

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பித்தது முதற்கொண்டு - சுமூகவாழ்வை ஏற்படுத்துவதில் மிகப் பெரும் தடைக்கல்லாக இருந்துவரும் உயர் பாதுகாப்பு வலயப்பிரச்சினை - யாழ்.குடாநாட்டின் பாதுகாப்பு விவகாரத்தை ஆராயும் உபகுழுக் கூட்டத்திலும பெரும் சர்ச்சையையும் முரண்பாட்டையும் ஏற்படுத்தியிருக்கிறது.

யாழ்.குடாநாட்டின் குறிப்பிடத்தக்க நிலப்பரப்பை ஆக்கிரமித்துக்கொண்டு - ஆயிரக்கணக்கான குடிமனைகளையும், பெருமளவு தோட்டப்பகுதிகளையும், கரையோரப் பகுதிகளையும் சூனியப்பகுதியாக, இராணுவப் பிரசன்னத்துக்குள் இருக்கும் 'உயர்பாதுகாப்பு வலயங்கள்' - சமாதானத்திற்கான முயற்சிகளில் பாதிப்பைத் தரும் 'அச்சுறுத்தல் வலயங்கள்' என இன்று உருவாகியிருக்கின்றன.

வளமிகுந்த பாரிய நிலப்பரப்பை, இராணுவ நல நோக்கில் தொடர்ச்சியாக கையகப்படுத்தி வைத்துக்கொண்டு - எவ்விதத் தளர்வுகளுமற்ற பிடிவாதப் போக்கில் இராணுவம் தன் நிலைப்பாட்டைப் பேணுமாயின், இனிமேல் - பாதுகாப்பு உபகுழுக்கூட்டங்களில் கலந்துகொள்வதில் பயனில்லை என்ற விடுதலைப் புலிகளின் அறிவிப்பு, மக்களின் மனநிலையை நேரடியாகவே படைத்தரப்பிடம் தெரிவிக்க வைத்திருக்கின்றது.

ஓமந்தையில் நடந்த முதலாவது பாதுகாப்பு உபகுழுக்கூட்டத்திலும், பின்னர் முகமாலையில் நடந்த மாவட்ட ரீதியான உபகுழுக்கூட்டத்திலும், இறுதியாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற பாதுகாப்பு உபகுழுவின் இரண்டாவது கூட்டத்திலும் - உயர் பாதுகாப்பு வலயம் மிக முக்கியமான விவகாரமாகப் பேசப்பட்டாலும் -

பேச்சுக்களில் பங்குபற்றிய இராணுவத் தரப்பு குறிப்பாக, யாழ்.மாவட்ட இராணுவ உயர் அதிகாரிகள் - மிக இறுக்கமான நிலைப்பாட்டையே கடைப்பிடித்தனர்.

மக்களது மீள்குடியேற்றம், சுமூகநிலை, அபிவிருத்தி, புனர்வாழ்வு - புனரமைப்பு என்பவற்றை விட - உயர்பாதுகாப்பு வலயத்தின் இராணுவச்சார்பு ஆதாயமே அவர்களது வாதாட்டமாக இருந்தது.

ஏற்கனவே - ஒஸ்லோ பேச்சுக்களிலும், யாழ்.பிராந்தியத்தில் மீள்குடியேற்றம் தொடர்பான பேச்சுக்களிலும், யாழ். இராணுவத் தளபதியின் நடவடிக்கைகள் கடும்போக்கானது என விடுதலைப் புலிகளால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

அதேநிலையே - நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுக்களிலும் நீடித்ததால் - விடுதலைப் புலிகள் தரப்பில் கால அவகாசம் ஒன்று முன்வைக்க வேண்டியிருந்ததாகத் தெரியவருகிறது.

சமாதானத்துக்கான உறுதிப்பாடு என்பது, பரஸ்பரம் இரண்டு தரப்பிலிருந்து நல்லெண்ண முயற்சிகளின் விளைவாகவே விருத்தியடையும் என்ற நிலையில் -

உயர்பாதுகாப்பு வலயம் என்பது - மற்றைய தரப்பிலிருந்து, மக்கள் நலனுக்கான அடிப்படையில் - தளர்வினை எதிர்பார்த்துள்ளது என்ற நிலையில் -

தொடர்ந்தும், படைத்தரப்பு விட்டுக்கொடுப்பற்ற மனோநிலையிலிருப்பது எவ்வகையிலும் வரவேற்கக் கூடியதல்ல.

மாறாக - அமைதிக்கான நம்பிக்கையை, பரஸ்பரப் புரிந்துணர்வைச் சிதைத்துவிடுவதாகவே அது அமைந்துவிடுமென்பது கவனிக்கத்தக்கது.

இவ்வாறான நிலைமை - படைத்தரப்பினால் புரிந்துகொள்ளப்படமுடியாத ஒன்றல்ல. ஏனெனில் - பல தடவைகள் - விடுதலைப் புலிகளின் தரப்பினால் மட்டுமல்ல, பொது அமைப்புக்களாலும், தொண்டர் நிறுவனங்களாலும் இந்த விடயம் பற்றிப் பல தடவைகள் எடுத்துரைக்கப்பட்டே வந்துள்ளது.

அதேவேளை - உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து வெளியகற்றப்பட்ட மக்களின் அவலவாழ்வும் - படையினர் கண்முன்னமேயுள்ளது.

இந்த வகையில் - நிலைமை சரிவர உணரப்பட்டாக வேண்டியபோதும், நிரந்தர அமைதிக்கான வழிவகைகளுக்குத் துணைநில்லாது, இராணுவ நலனை முன்னிறுத்துவது என்பது - மனிதாபிமானமற்ற, மக்கள் நலன் கருதாத போக்கேயன்றி வேறல்ல.

எனவே - நிரந்தரமான சமாதானத்தை உருவாக்க வேண்டுமென்ற உறுதிப்பாடு இருக்குமானால், படைத்தரப்பு தன்னிலையில் மாற்றத்தைச் செய்யவேண்டியது கட்டாயமாகும்.

அவ்வாறான ஒரு முயற்சியே - அமைதிக்கான முயற்சிகளுக்கு, இராணுவம் குறுக்கே நிற்கவில்லை, முட்டுக்கட்டையாக இல்லை என்பதை நிரூபிப்பதாக அமையும்.

ஆகவே - இடம்பெயர்ந்து வாழும் மக்களின் துன்ப நிலையைப் போக்க, அம்மக்களுக்கேயான சொந்த இடங்களுக்கு அவர்கள் திரும்பிச் செல்ல, சமாதானத்தின் விளைவுகளை அம்மக்கள் அனுபவிக்க - படைத்தரப்பு முழுமுயற்சிகளையும் எடுக்க வேண்டியது அவர்களுக்குரிய அவசியமான கடமையேயாகும்.

# மற்ற நாடுகள் குண்டுகள் வெடிக்குமோ என்று அஞ்சியிருக்க நாம் நிம்மதியாகவிருக்கிறோம்!

## வெளிநாட்டமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ

(கொழும்பு)

லண்டனில் இருந்து ஜகார்த்தா வரை, பொஸ்டனில் இருந்து ஜொஹனஸ்பேர்க் வரை எப்போது குண்டுகள் வெடிக்கும் என அஞ்சிக்கொண்டிருக்க, கடந்த ஒருவருட காலமாக யுத்த பயமின்றி - இழப்புக்களின்றி நாம் வாழ்கிறோம்.

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ.

கடந்த ஆட்சிக் காலத்தில் இலங்கை குறித்து சர்வதேச ரீதியில் தவறான விம்பம் ஒன்று ஏற்பட்டிருந்தது. பொதுஜன முன்னணி யுத்தத்தை நடத்தியதாலேயே இந்நிலை ஏற்பட்டது.

புலிகள் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தைப் பிரகடனம் செய்து சமாதானத்துக்காக கையை நீட்டியபோது, அமைச்சர் கதிர்காமரே அக்கினி கீல நடவடிக்கைக்கு வழிகாட்டினார். கதிர்காமர் சர்வதேச அரங்கில் தன்னை மட்டுமன்றி இலங்கையையும் ஓரம் கட்டிவிட்டார்.

இன்று நிலைமை மாறியிருக்கிறது. 2006 இல் ஐ.நா.பொதுச் செயலாளர் பதவிக்குப் போட்டியிடக் கூடிய நிலைக்கு வந்திருக்கிறோம். நாட்டுப்பற்றாளர்கள் என்று கூறிக்கொள்ளும் நமது பயூன்களோடு ஒப்பீடு செய்யும்போது பிரபாகரன் தன்னை ஒரு சிறந்த நாட்டுப்பற்றாளர் என்பதைக் காட்டியுள்ளார். இலங்கை சிங்கள மக்களுக்கோ, பௌத்தர்களுக்கோ மாத்திரம் உரிய நாடு அல்ல. இங்கு பல மதத்தினர், இனத்தவர்கள் வாழ்கின்றனர்.

இந்தியாவின் பங்களிப்பின்றி இலங்கையில் அமைதி ஏற்படமுடியாது. புவியியல் ரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும் இந்தியா நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருக்கின்றது. இந்திய நலன்களைக் சரியாகக் கையாளாவிட்டால் நாம் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிவரலாம்.

சமஷ்டி குறித்துப் பலர் பிரச்சினையைக் கிளப்புகின்றனர். ஆனால், இவர்கள் தனிநாட்டுக்கான அச்சுறுத்தல் நீங்கிவிட்டதென்பதை மறந்து விடுகிறார்கள். வட-கிழக்குப் பகுதிக்கு பெரும் பிராந்திய சுயாட்சியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தனிநாடு உருவாவதைத் தடுக்க அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டும்.

தகவல் தொடர்பு சாதனங்களைப் பெற புலிகளுக்கு உதவியதாக குற்றச்சாட்டுக்கள் கிளப்பப்படுகின்றன. நான் தகவல் தொடர்பு அமைச்சராக இருந்த காலத்தில், சமூக வானொலி நிலையங்களை நிறுவியபோது, இப்படியான எதிர்ப்புக் கிளம்பியது. புலிகளின் வானொலியும் ஒரு சமூக வானொலியே. எப்.எம்.ஒலிபரப்பை நடத்துவதற்குப் பணத்தைக் கொடுத்தால் அனுமதி கிடைக்கும். இதில் தவறில்லை. சிரசவுக்கு அனுமதி கொடுக்க முடியுமானால், புலிகளுக்கு ஏன் அனுமதி கொடுக்கக் கூடாது. தினேஷ் குணவர்தன கூட அவிசாவளையில் தனக்கொரு வானொலி நிலையத்தை அமைக்கலாம். ஆனால் அதற்குப் பணம் செலுத்த வேண்டும். இவ்வாறு ரிரோன் பெர்னான்டோ மேலும் தெரிவித்துள்ளார்.

# 3 வருடத்தில் ராணுவத்திலிருந்து 16 ஆயிரம் பேர் தப்பி ஓடினர்!

## பிரிகேடியர் சரத் கருணாரட்ண

(கொழும்பு)

இந்த வருடத்தில் பெருமளவிலான படையினர் தப்பி ஓடியுள்ளதாக வெளியான தகவல்களை இராணுவப் பேச்சாளர் சனத் கருணாரட்ண மறுத்துள்ளார். இந்த வருடத்தில் 5642 படையினரே தப்பி ஓடியுள்ளதாகவும், கடந்த இரண்டு ஆண்டுகளை விட இவ்வாண்டில் தப்பியோடியோர் தொகை குறைவு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2000ஆம் ஆண்டில் 4871 படையினர் தப்பி ஓடினர். 2001 இல் 5858 படையினர் தப்பி ஓடியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். புரிந்துணர்வு உடன்பாடு அமுலுக்கு வந்த பின்னர் படையினர் தப்பியோடும் வீதம் அதிகரித்துள்ளதாக வெளியான செய்திகளை அவர் மறுத்துள்ளார்.

# அமெரிக்க வர்த்தக அமைச்சர் அடுத்தவாரம் கொழும்பிற்கு

(நியூயோர்க்)

இலங்கையுடனான பொருளாதார உறவை வலுப்படுத்திக் கொள்வதற்காக - அமெரிக்க அரசின் வர்த்தக அமைச்சகத்தின் உதவி அமைச்சரான வில்லியம் எச்.லாஷ் கொழும்பு வரவுள்ளார்.

எதிர்வரும் 19 ஆம் திகதி கொழும்பு வரும் இவர் - இருதரப்பு பொருளாதார உறவுகளை மேம்படுத்துவது பற்றி இறுதிக்கட்ட முடிவுகளை மேற்கொள்ளவுள்ளார்.

வெளிநாட்டு வர்த்தகத்துறையில் அனுபவமும், கல்வியறிவும் கொண்ட இவரது இந்த விஜயத்தைத் தொடர்ந்து - அமெரிக்கக் கம்பனிகள், இலங்கையில் பெருவாரியான முதலீடுகளைச் செய்ய முன்வரலாம் எனக் கொழும்பில் எதிர்பார்க்கப்படுகின்றது.

# அடுத்த சுற்றுப் பேச்சுக்களில் முஸ்லிம் பிரதிநிதிகள் குழு!

## அதாவுல்லா கோரிக்கை

(கொழும்பு)

தாய்லாந்தில் நடைபெறவுள்ள அடுத்த சுற்றுச் சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களின் சார்பில் தனியான குழுவொன்று கலந்துகொள்ள ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், பிளவுபட்ட முஸ்லிம் காங்கிரசின் தலைவரான அதாவுல்லா கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்கத்தரப்பிலும் புலிகள் தரப்பிலும் பேச்சுக்களில் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும்போது - முஸ்லிம்கள் தரப்பில் இருந்தும் பேச்சுக்களில் பிரதிநிதிகள் குழுவொன்று பங்குபற்ற வேண்டும்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் முஸ்லிம் காங்கிரஸில் இருந்து நீக்கப்பட்டுவிட்டார். இவர் முஸ்லிம்கள் சார்பில் பேச்சுக்களில் கலந்து கொள்ள முடியாது. அரசாங்கப் பிரதிநிதியாக இவர் பேச்சுக்களில் கலந்துகொள்வதற்கு ஆட்சேபனையில்லை.

சுப்ரீம் கவுன்சில் ஒன்றை அமைக்க ஹக்கீம் இணங்கும் வரை தாம் அவருடன் இணங்கப்போவதில்லை என்றும் அதாவுல்லா தெரிவித்திருக்கின்றார்.

# சமஷ்டி குறித்த எதிர்ப்பினால் பொ.ஐ.மு.வுக்குள் முரண்பாடு!

## சமசமாஜக் கட்சி வெளியேறும்?

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட சமஷ்டித்தீர்வு குறித்த இணக்கம் தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணியினுள் பிளவு ஏற்பட்டுள்ளது.

ரணில் அரசின் சமஷ்டித்தீர்வு குறித்த யோசனை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா மற்றும் லக்ஷ்மன் கதிர்காமர், சரத் அமுனுகம ஆகியோர் இணைந்து கலந்துரையாடி தமது கட்சியின் எதிர்ப்பை வெளிப்படுத்தும் ஒரு அறிக்கை ஒன்றைத் தயார்படுத்தினர்.

இந்த அறிக்கையை ஆராய்ந்த பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஓர் அங்கத்துவ கட்சியான, லங்கா சமசமாஜக்கட்சி இவ்வறிக்கையை ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளது. இது குறித்து அக்கட்சியின் செயலர் பட்டி வீரக்கோன் கருத்து தெரிவிக்கையில், புலிகள் தனிநாட்டுக் கொள்கையிலிருந்து சமஷ்டி திட்டத்திற்கு வந்துள்ள நிலையில் இத்திட்டத்தை விமர்சிப்பது தவறானது.

இது பொதுஜன ஐக்கிய முன்னணியின் எதிர்ப்பறிக்கையல்ல. சுதந்திரக் கட்சியின் அறிக்கை மட்டுமே எனக் கடுமையாக சாடியுள்ளார். இதனால் அவருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் தற்போது விரிசல்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் நிலைமை தீவிரமானால் அக்கட்சி முன்னணியிலிருந்து வெளியேறலாம் எனவும் தெரியவருகிறது. (01)

## படையினரை மதிக்கவில்லையாம்

# அரச ஊடகங்கள் மீது ரணவிரு செவன பாய்ச்சல்

(கொழும்பு)

இறந்த படைவீரர்களின் நலனைக் கவனிக்கும் ரணவிரு செவன அமைப்பின் நிர்வாகத்தினர், அரச ஊடகங்கள் படையினர் நலனில் மாற்றாந்தாய் மனப்பான்மையில் நடப்பதாக கடுமையாக விமர்சித்துள்ளது.

படைவீரர்களைக் கௌரவப்படுத்தும் நாளில் அரச ஊடகங்கள் அது குறித்து பெரிதும் அக்கறை காட்டவில்லை. ஆனால், பிரபாகரனின் மாவீரர் தின உரைக்கு முக்கியத்துவம் கொடுத்தன. நாட்டுக்காக இறந்த படையினரை இப்படியா கௌரவிப்பது என ரணவிரு செவன அமைப்பினர் கேள்வி எழுப்பியுள்ளனர். இத்தகைய செயற்பாடுகளை திருத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு அரச ஒலி, ஒளிபரப்பு நிலையங்களை அவர்கள் கேட்டுள்ளனர்.

# விசேட அதிரடிப்படைக்கு விரைவில் ஆட்சேர்ப்பு!

பொலிஸ் விசேட அதிரடிப்படைக்கு 1750 பேர் புதிதாக சேர்க்கப்படவுள்ளனர்.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவில் வர்த்தகமானி அறிவித்தல் வெளியாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

1675 பொலிஸாரும் 75 உப பொலிஸ் அதிகாரிகளுமாக 1750 பேரின் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# எமது மண்ணில் ஓவியத்துறை வளர்ச்சிக்கு ஊக்கமும் ஆர்வமும் இன்னமும் தேவை

*ஈழத்து ஓவிய வரலாற்றில் விரல் விட்டு எண்ணத்தக்க ஓவியர்களில் ஒருவராகத் திகழ்பவர் "ரமணி" என்னும் புனைபெயரைக் கொண்ட ஓவியர் வை.சிவசுப்பிரமணியம். இவர் சிறந்த ஓவியராகவும், சிற்பியாகவும் திகழ்கின்றார். ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளராகிய இவர், தற்போது யாழ்.பல்கலைக் கழக நுண்கலைத்துறை 'சித்திரமும் வடிவமைப்பும்' கற்கைத் துறையின் வருகை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார்.*

*கேள்வி:* தங்களின் ஓவியத்துறை வளர்ச்சியில் ஊக்கமாக அமைந்த காரணிகள் பற்றிக் கூறமுடியுமா?

*பதில்:* எனது குடும்பத்தில் தந்தையார் உட்பட எல்லோரும் ஓவியத்தில் ஈடுபாடுடையவர்கள். நான் இடைநிலைக் கல்வியில் விஞ்ஞான பாடங்களையே கற்றேன். தற்செயலாகவே இத்துறைக்கு ஈர்க்கப்பட்டேன். எனது வழிகாட்டியாகவும், வாழ்வின் திசை காட்டியாகவும் விளங்கியவர், அளவெட்டியைச் சேர்ந்த "ஆதவன்" என்னும் புனைபெயரில் ஓவியம், இலக்கியம், நாடகம் ஆகிய துறைகளில் ஈடுபட்டிருந்த சி.பொன்னம்பலம் ஆசிரியர். தற்செயலாக அவரை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. என்னுடைய திறமையை இனங்கண்டு, என்னை இத்துறைக்கு வழிகாட்டினார்.

*கேள்வி:* உங்களது, குரு அல்லது வழிகாட்டி யார்...?

*பதில்:* எனது முதலாவது குரு சி.பொன்னம்பலம் ஆசிரியர் அவர்களே. அவர் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் முன்னை நாள் புகழ்பூத்த ஆசிரியராக விளங்கியவர். அக்கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்தாலும், எனது சொந்த ஊரும், அவருடைய சொந்த ஊரும் அளவெட்டிக் கிராமமாகும். அவரை சந்தித்தபின் அவருடைய வீட்டுக்குச் சென்று, சில நாட்கள் ஓவியம் பயின்று வந்தேன். பின்பு அவர் என்னை ஓவியத்துறையில் மேலும் வளர்ப்பதற்காக யாழ்ப்பாணத்தில் ஓவியர் "மார்க்"கினால் நடத்தப்பட்டு வந்த விடுமுறைக்கால ஓவியர் கழகம் என்னும், ஓவியப் பயிலகத்தில் இணைத்துவிட்டார். அங்கு சில மாதம் ஓவியம் பயின்றபின், கொழும்பிலுள்ள அரச நுண்கலைக் கல்லூரியில் 5 வருடங்கள் வரைதலும், வர்ணம் தீட்டுதலும் என்ற நெறியில் படித்து முதல் வகுப்பில் சித்தியெய்தினேன். படித்துக் கொண்டிருக்கும் காலத்திலேயே பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றில் ஓவியங்கள் தீட்டத் தொடங்கினேன்.

*கேள்வி:* நவீன ஓவியத் துறையில் குறிப்பிடத்தக்க ஒருவராக உள்ளீர்கள்... ஈழத்து நவீன ஓவியத்துறை வளர்ச்சி பற்றி நீங்கள் கருதுவது என்ன?




*பதில்:* உலகப் புகழ்பெற்ற பல ஓவியர்களும், யதார்த்த ஓவியங்களில் முதிர்ச்சிபெற்ற பின்பே நவீன ஓவியங்களைத் தீட்டினர். அம் முதிர்ச்சியில்லாமல் தீட்டப்படும் நவீன ஓவியங்கள் போலியான, பலவீனமுற்ற ஆக்கங்களே. நவீன ஓவியம் தீட்டுவதற்கு தேடல்களும் பரிசோதனைகளும் தேவை. அர்த்தபுஷ்டியுள்ளதும், இதுவரையில் வேறு ஒருவர் கையாளாத புதிய உத்தி முறைகளும், பார்வையாளருக்கும் படைப்புக்கும் இடையில் ஒரு ஆழமான ஈடுபாட்டை ஏற்படுத்துவையாகவும் அவை இருத்தல்வேண்டும். ஈழத்தைப் பொறுத்தவரை தெற்கில் நவீன ஓவியம் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது. வடக்கு- கிழக்கில் ஆரோக்கியமற்ற நிலையே காணப்படுகிறது.

*பதில:* தங்களது ஓவியமுயர்சிக்கு கிடைத்த பாராட்டுக்கள், பட்டங்கள் பற்றிக் கூறமுடியுமா?

*பதில்:* எனது சில நீர் வர்ண ஓவியங்கள் திருமறைக் கலாமன்ற இயக்குநர் பிதா.மரியசேவியர் அடிகளால் கலிபோர்னியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்குள்ள "பேஸ்" (Pace) பல்கலைக்கழகத்தில் "நான்கு ஆசிய ஓவியர்களின் ஓவியங்கள்" என்ற தலைப்பில் காட்சிப்படுத்தப்பட்டன. இன்னமும் பல மேடைகளில் பொன்னாடை, தங்கப்பதக்கம், விருதுகள் பெற்றும் பாராட்டப்பட்டிருக்கிறேன். "கலாஞானகேசரி" "சிவகலாபூஷணம்" என்னும் பட்டங்கள் சூட்டப்பட்டுள்ளன.

*கேள்வி:* சிற்பத்துறையிலும் நீங்கள் பெயர்பெற்ற ஒருவர். தங்களின் சிற்பத்துறை செயற்பாடுகளின் வளர்ச்சி பற்றிக் கூறமுடியுமா?

*பதில்:* நான் சிற்பத்தை நுண்கலைக் கல்லூரியில் ஒரு பாடமாகக் கற்றேன். அதோடு இந்தியச் சிற்பி மணி, கொழும்பில் இருந்த காலத்தில் அவரிடம் சில நுட்பங்களைப் பயின்றேன். முதன் முதலில் தியாகி சிவகுமாரனின் சிலையைச் செய்தேன். அது 1975 இல் உரும்பிராயில் வைக்கப்பட்டு, பன்பு இராணுவததால் உடைககப்பட்டது. அதன் பின், தீருவிலில் 7 வீர மறவர்கள் என்ற, ஒவ்வொன்றும் ஏழரையடி உயரமுள்ள சிற்பத் தொகுதி என்னால் 1990 இல் அமைக்கப்பட்டது. அதன் பின் கேணல் கிட்டு, மில்லர், தந்தை செல்வா, கந்தையா உபாத்தியாயர், இந்து போட் HINDU BOARD ) இராஜரட்ணம் போன்றவர்களின் சிலைகளை அமைத்துள்ளேன். களிமண்ணில் மூல உருக்களை வடிவமைத்துப் பின் பிளாஸ்ரர் ஒவ் பரிசில் ( PLASTER OF PARIS) அச்சு அமைத்துப் பின் அதில் வார்த்து எடுத்தலே நேர்த்தியான சிற்பங்களை அமைக்கும் முறையாகும். அதற்குச் செலவு அதிகமாகும். பொருள் தட்டுப்பாடு, செலவுச் சுருக்கம் காரணமாக நாம் இரும்பில் கட்டமைப்பைச் செய்து ஆரம்பத்திலிருந்தே சீமெந்தில் அப்பிச் செய்கிறோம். மெய் உருக்களை அமைப்பதற்கு இது உகந்த முறையல்ல. சிரமமும் அதிகம். இங்கு பெரிய ஸ்தாபனங்கள் - கோருவிலை கூறியே பெரியவர்களின் மெய் உருக்களைச் செய்வதற்கு ஓடர் கொடுக்கிறார்கள். அதனால், சிற்பம் செய்யத் தெரியாதவர்கள் கூட குறைந்த விலையில் சிற்பம் செய்து கொடுக்கிறார்கள். அதனாலேயோ என்னவோ யாழ். நகரில் சில சிற்பங்கள் மிக மோசமாக உள்ளன. இது வருந்தத்தக்கது.

*கேள்வி:*- கல்வித் திணைக்களத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியுள்ளீர்கள். பாடசாலைகளில் சித்திரக் கல்வி நிலை பற்றிக் கூறமுடியுமா?

*பதில்:*- குறிப்பாக வட மாகாணத்தில் சித்திர ஆசிரியர்கள் பற்றாக்குறை மோசமான நிலையில் உள்ளது. எத்தனையோ பெரிய பாடசாலைகளில் கூட சித்திர ஆசிரியர் இல்லாமல் வேறுபாட ஆசிரியர்களே சித்திரம் கற்பிக்கின்றனர். இங்குள்ள பாடசாலைகளில் 60% மான மாணவர்கள் தெரிவுப் பாடமாக சித்திரப்பாடத்தையே எடுக்கின்றனர். திறமையுள்ள மாணவர்கள் இருந்தபொழுதும் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லாததால் சித்திர பாடககற்றலின் அடைவும், பெறுபேறும் வீழ்ச்சியாகவே உள்ளது. பெற்றோரும் மாணவரை ஊக்குவிப்பது குறைவு. ஒவ்வொரு பாடசாலைகளிலும் வருடாவருடம் விளையாட்டுப் போட்டி நடைபெறுவது போல், சித்திரக் கண்காட்சியும் நடைபெறவேண்டும். தற்பொழுது பாடசாலைகளிலும், உயர்கல்வி நிறுவனங்களிலும், ஓவியக் கல்விப் பயிற்றுநர்களாக விளங்குபவர்கள், தற்கால ஓவிய வளர்ச்சிக்கேற்ப தங்களைத் தயார்படுத்திக் கொள்ளாத படியால், பரீட்சைகளிலும், போட்டிகளிலும் பங்குபற்றும் மாணவர்கள் பெரிதாகப் பாதிக்கப்படுகிறார்கள். அதனால் அவர்கள் தங்களை தயார்படுத்திக்கொள்வது அவசியமாகும்.

*கேள்வி:*- ஈழத்து ஓவியத் துறையை வளர்த்தெடுப்பதற்குரிய ஆலோசனைகள் சில கூறமுடியுமா?

*பதில்:*- தற்போதுள்ள யாழ். பல்



**வை.சிவசுப்பிரமணியம் (ரமணி)**

கலைக்கழகத் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் பெருமுயற்சியால் பல்கலைக்கழகத்தில் சித்திரமும் வடிவமைப்பும் என்ற நுண்கலைமாணிப் பாடநெறி, 1999 இல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது எமது மாணவர்களுக்கு கிடைத்த ஒரு பெரிய வரப்பிரசாதம் என்றுதான் கூறவேண்டும். இதில் கற்கின்ற மாணவர்கள், நல்ல அர்ப்பணிப்புடன் ஈடுபடடுத் தம்மை வளர்த்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும். அங்கிருந்து வெளியேறும் மாணவர்களினால், ஓவியத்துறை ஒரு ஆரோக்கிய நிலையை அடையுமென நினைக்கிறேன். அதோடு, யாழ்ப்பாணத்தில் நல்ல முறையில் அமைக்கப்பட்ட ஒரு ஓவியக் காட்சியகம் இல்லை. வடக்கு - கிழக்கு அபிவிருத்தியில், இதற்கும் முக்கிய இடம் கிடைக்கும் என நினைக்கிறேன். இப்படியான செயற்பாடுகளினால், தெற்கிலிருக்கும் ஓவியர்களின் ஆக்கங்களையும், இங்கு காட்சிப்படுத்தி மக்களின் ஓவிய இரசனையையும் வளர்க்கலாம்.

**நேர்காணல் - எஸ்.சாந்தகுமார்**

# எங்கே போகின்றது எம் இனிய தமிழ்? இனி மெல்லச் சாகுமோ? உயிர்க்குமோ?

**ஆ**ங்கில மொழி கோலோச்சிய கடந்த இரு நூற்றாண்டுகளிலே, பாரதியின் 'பேதை' குறித்தாங்கு 'மெல்லத் தமிழினிச் சாகும்' என்ற நிலை படிப்படியாய்ப் புகுவதாயிற்று. தமிழ் கற்றோர் தமது நிலையிலே தாழ்ந்து போயினர். மரபு வழி வந்த இலக்கிய இலக்கணக் கல்வியானது புறக்கணிப்புக்கு உள்ளாயிற்று. இந்த அவல நிலையினைப் போக்கி, மீண்டும் தமிழ்மரபுக் கல்வியையும், அதற்கு உறுதுணையாக வடமொழிக்கல்வியையும் உயிர்பிக்கச் சென்ற நூற்றாண்டின் முதற்காலிலே தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் கசடறக் கற்று, வட பெரும்பாக வித்தியாதரிசியாய் அன்று விளங்கிய முகாந்திரம் சதாசிவ ஐயர் முன்வந்தார். அவரின் பெருமுயற்சியால் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் 1923இல் உருவாயிற்று.

### சங்கக். குறிக்கோள்களும் பணிகளும்

அந்நாள் ஆளுநரைப் (ஆங்கிலேயர்) பதவி வழித் தலைவராயும், வட பெரும்பாக வித்தியாதரிசியைப் பதவி வழிச் செயலாளராயும் கொண்டு, அன்றிருந்த தமிழறிஞர், வடமொழி வல்லார், உயர் பதவிகளிலிருந்த தமிழ் ஆர்வலர்கள் பலரையும் உறுப்பினர்களாயும் பெற்று, இச் சங்கம் இயங்கலாயிற்று. தமிழிலும் சமஸ்கிருத்திலும் மிக விரிந்த பாடத்திட்டத்தினை உள்ளடக்கி, ஆங்கிலம், சிங்களம், இலங்கை வரலாறு, சைவ சமயம் என்பவற்றையும் பாடங்களாய் அறிமுகம் செய்து, பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் என்ற படிமுறை ஒழுங்கிலே பரீட்சைகள் நடாத்தித் தேர்வு பெறுவோருக்குப் பட்டம் வழங்குவது இச்சங்கத்தின் முதன்மைக் குறிக்கோளாய் அமைந்தது.

### இரண்டுங்கெட்டான் நிலை

எனினும் பண்டிதரானோரை நவீன உலகு மதிக்கத் தவறியதோடு, அவர்களுக்கெனக் கணிசமான ஒரு சம்பளத் திட்டத்தையும் வகுத்தளிக்காது புறக்கணிக்கலாயிற்று.

1961 இல் கற்றலுக்கான கலைப் பாடங்கள் யாவிற்கும் ஊடக மொழியாய்த் தமிழ் மாறியதும், ஆங்கில மொழிக் கல்வி தழுவிய தமிழ் மொழிப் பாடத் திட்டமும், வினாவமைப்புக்களும் காலத்தின் தேவைக்கேற்ப மாறியதும், தமிழின் மரபு மொழிக் கல்வியை மிகுதியும் பின்தள்ளி விட்டன.

**கலாநிதி க.சொக்கலிங்கம், துணைத் தலைவர், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்**

அதுமட்டுமன்றி, இடைநிலை வகுப்புக்களிலே குறித்த பட்டதாரிகள், பாடநூல்களிலே தரப்பட்டுள்ள இலக்கணப் பகுதிகளைக் கண்டு அஞ்சி, தயங்கி, 'எம்மை விட்டால் போதும்' என்ற விரக்திக்கு உள்ளாவதும் கவனிப்புக்குரியதாகும்.

### இலக்கணமும் மொழியியலும்

நவீனக் கல்வியின் நற் பயன்கள் பல. அவற்றுள் ஒன்று மொழியியல் (Linguistics) என்பது. தமிழ்க கல்விமரபு - மொழிவழக்கை ஆன்றோர்க்கே உரியது என்று அறுதியிட்டு, அவர்களின் வழியினின்று அணுவளவேனும் விலகலாகாது என்று வரையறை செய்யும். மொழியியலோ 'மக்களால், மக்களுக்கு, மக்களின் மொழி' என்று மொழியாட்சியில் சனநாயகக் கோட்பாட்டை முன்வைக்கும். எதிர்காலம் மொழியியலுக்கே உரியதாயினும், அம்மொழியியலை நன்கு விளங்கிக் கொள்ள முன்தேவையாய் இலக்கணம் உள்ளது என்பதையும் நாம் மறந்துவிடலாகாது.மொழியியலார் எவரும் இலக்கணத்திலே தேர்ச்சி பெறாதவராய் இரார், என்பதற்கு மொழியியல் நூலாசிரியர்கள் பலரையும் சான்று காட்டலாம்.

## தமிழின் தொன்மையும் செழுமையும் பேணவென்று தோற்றுவித்த சங்கம்

எனவே, ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், பல்கலைக்கழக உயர் தமிழ்க் கல்விக்கு, மொழியியல், இலக்கணம், இலக்கியம் ஆகியவற்றின் கல்விக்கு முரணானது அன்று என்பதும், பல்கலைக் கழகத்தில் இடைவிடப்படும் பகுதியை நிறைவு செய்யவே உதவும் என்பதும் மனங்கொள்ளத்தக்கன.

### சங்கத்தின் நிகழ்காலம்

1923 இல் உருவாகி, சில தசாப்தங்களாய் அரும்பணியாற்றி, காலப் போக்கில் முதுமை கண்டு இன்று இச்சங்கம் தன் செயற்பாடுகளில் தளர்நடை இடுகிறது என்றே மிகவும் கவலையுடன் கூறவேண்டியுள்ளது. வெ.இளங்குமரன் (கல்வி மேம்பாட்டுப் பேரவை, தமிழ் வளர்ச்சிக் கழகம்) அவர்களது ஊக்குவிப்பும், உறுதுணையும் 1995 வரை இச்சங்கத்திற்கு இருந்ததையும், அக்காலத்தில் கல்வி வலயங்கள் ஐந்திலும், பண்டிதர் வகுப்புக்கள் சிறப்பாக நடந்ததையும், அமரர் இ.சிவாணந்தனின் தளர்விலா உறுதுணையால் சங்க விழாக்கள், முன்னோடிப் பரீட்சைகள் க.பொ.த.(உ/த), க.பொ.த.(சா/த), பண்டிதர், பால பண்டிதர், பிரவேச பண்டிதர் பரீட்சைகள் சிறப்புற நடந்ததையும் நினைவுகூரும்பொழுது, இன்று எமது நிலை மிகவும் அதிர்ச்சி தருவதாகவே இருக்கின்றது.

### சோர்விலோம், துளங்கோம், முன்செல்வோம்

எனினும், நாம் சோர்ந்து விடவில்லை. சென்ற அரசு காலத்தில் எமக்குக் கிடைத்த நிதி உதவி கொண்டு, முன்னர், பாரதி பாஷிய வித்தியாசாலையாய் இருந்து கைவிடப்பட்ட கட்டடத்தை, அந்நாள் வடக்கு-கிழக்கு கல்வியமைச்சின் செயலாளர் டிவகலலா அவர்களின் மூலம் பெற்றுத், திருத்திப் புதுவடிவும், புது மெருகும் கொடுத்துள்ளோம். இப்பணியிலே சங்கப் பொதுச் செயலாளர் பண்டிதர் ந.கடம்பேஸ்வரன், கவிஞர் சோ. பத்மநாதன், வே.ஞானகாந்தன், கோ.சி.வேலாயுதம் ஆகியோரின் பங்களிப்புக்கள் நன்றியோடு விதந்து கூறப்படவேண்டியன. முன்னாள் மேலதிகக் கல்விப்பணிப்பாளர் தணிகாசலம் அவர்களது ஊக்குவிப்பையும், அண்மையில் ஓய்வு பெற்ற மேலதிகக் கல்விப் பணிப்பாளர் சிவராசா அவர்களது ஒத்துழைப்பையும் மறந்துவிடல் இயலாது. இவ்வகையில் முன்னாள் கல்விப் பணிப்பாளர்கள் இ. சுந்தரலிங்கம், செல்வி.தி.பெரியதம்பி ஆகியோரும் நன்றிக்குரியரே.

இம்மாத நடுப்பகுதியில் சங்க கட்டடத்திறப்பு விழா சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்கின்றோம். கட்டடத்தில் மேல்மாடி மண்டபமும், இரண்டு வகுப்பறைகளும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. பால பண்டிதர், பண்டிதர் வகுப்புக்களைத் தொடர்ந்து இவ்வகுப் பறைகளில் நடத்தவுள்ளோம். க.பொ.த (உ/த) வகுப்பில் தமிழ்ப் பாடத்தில் திறமைச்சித்தி பெற்றோர் பால பண்டிதர் வகுப்பிலும் கலைமாணிப் பரீட்சையில் தமிழை ஒரு பாடமாகக் கொண்டு சித்தி பெற்றோர் பண்டிதர் வகுப்பிலும் சேர்ந்து கற்கலாம்.

சங்கத்திற்கென நாம் நிறுவ இருக்கும் நூல்நிலையம் தொன்மையான இலக்கண, இலக்கிய நூல்கள் உள்ளிட்ட பயனுள்ள பல நூல்களையும் கொண்டிருப்பதால், தமிழ் மாணவர்கட்கும், ஆர்வலர்க்கும் அது எய்ப்பில் வைப்பாய் நின்றுதவும் என்பது எமது உறுதியான நம்பிக்கை.

சங்கப்பணிகளில் தோளோடு தோள் நின்று உழைக்கத் தமிழ் ஆர்வலர்களான இளைஞர்களை இருகரம் நீட்டி அன்புடன் அழைக்கின்றோம்.

*தமிழ் வாழ நாம் வாழ்வோம்.*

*வாழ்க தமிழ்.*

# 3 ஆயிரம் ஆடம்பரக் கார்களுடன் பாரிய கப்பல் கடலில் மூழ்கியது!

## ஆங்கிலக் கால்வாயில் நடந்த பெரும் விபத்து


கவிழ்ந்த 'ரிரைகலர்' கப்பல்


கப்பலை மோதிய கரிபா சரக்குக் கப்பல்

(லண்டன்)

3,000 ஆயிரம் புதிய ஆடம்பரக் கார்களை ஏற்றிக்கொண்டு சென்ற கப்பலொன்று - ஆங்கிலக் கால்வாயில் மூழ்கியது.

பல மில்லியன் டொலர் பெறுமதியான பி.எம்.டபிள்யூ, வொல்வோஸ், ஸாப்ஸ் போன்ற கார்களை ஏற்றிக்கொண்டு சென்ற நோர்வேயின் சரக்குக் கப்பல் ஒன்றே கடலில் மூழ்கியுள்ளது.

20 ஆயிரம் தொன் நிறையுடைய கரிபா என்ற சரக்குக் கப்பலுடன் அதிகாலை வேளையில் இக்கப்பல் மோதியதனால், உடனடியாகவே நீரில் மூழ்க ஆரம்பித்தது.

பார மிகுதியால் - கடலின் அடித்தளத்தினுள் இக்கப்பல் உடனடியாக அமிழ்ந்துவிட்டதாக மீட்புப் பணியாளர்கள் கூறுகின்றனர்.

கப்பலிலிருந்த 24 ஊழியர்கள் மீட்கப்பட்டுள்ளனர். பெல்ஜியத்திலிருந்து - சௌதாம்டன் நோக்கி சென்றுகொண்டிருந்த இக்கப்பலில் 77 கொன்ரெய்னர்களில் கார்கள் இருந்தன. மீட்கப்பட்ட கப்பலின் பணியாளர்களில் பெரும்பாலானோர் பிலிப்பைன்சைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரியவருகிறது.

ரிரைகலர் (Tricolor) என்ற பெயர் கொண்ட இக்கப்பல் 25 மில்லியன் ஸ்ரேலிங் பவுண் பெறுமதியும், அதனிலிருந்த கார்கள் 30 மில்லியன் ஸ்ரேலிங் பவுண் பெறுமதியுமானதென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

மூழ்கிய கார்கள், வெளியே எடுக்கப்பட்டாலும், அவை பாவனைக்கு உதவாதவையாகவே இருக்கும் என மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உலகவலம்

## பசுபிக் பிராந்திய அமெரிக்க தளபதி சீனாவுக்கு விஜயம்

(பீகிங்)

சீனாவுடன் இராணுவ உறவைப் பேணும் அமெரிக்காவின் முயற்சிகளின் ஒரு கட்டமாக - பசுபிக் பிராந்தியத்துக்கான அமெரிக்கப் படைகளின் தளபதி அட்மிரல்

அட்மிரல் தோமஸ் ஃபர்கோ


தோமஸ் ஃபர்கோ பீகிங் சென்றுள்ளார்.

கடந்த வாரம் - சீன இராணுவத் தளபதி சியோல் ஹுவாங்கி, வொஷிங்டனுக்கு விஜயம் செய்த பின்னர் - பீகிங்குக்கு வரும் உயர் அமெரிக்கப் படைத்தளபதி இவராவார்.

ஈராக் மீதான போர் ஆயத்தம், வடகொரியாவின் அணுவாயுதப் பலத்தைக் கட்டுப்படுத்துதல் ஆகிய விடயங்களில் - பீகிங்குடன் நெருங்கிய உறவைப் பேண, அமெரிக்கா விரும்புவதன் வெளிப்பாடே - இந்த உயர்மட்ட இராணுவ அதிகாரிகளின் பரஸ்பர விஜயம் என அவதானிகள் கூறுகின்றனர்.

# பாரதீய ஜனதாக் கட்சி குஜராத்தில் ஆட்சிக்கு!

(புதுடெல்கி)

இந்தியாவின் குஜராத்மாநிலத்தில் - பாரதீய ஜனதாக் கட்சியின் நரேந்திர மோடி மீண்டும் முதல்வராவது உறுதியாகியுள்ளது.

எதிர்க்கட்சியான இந்திரா காங்கிரஸ் கட்சியை விட - கூடுதல் பெரும்பான்மையுடன் அவர் ஆட்சியமைக்கின்றார்.

இதேவேளை - இந்த வெற்றியானது, பெரும்பான்மை இனங்களுக்கும், சிறுபான்மை முஸ்லிம்களுக்குமிடையே தோற்றுவிக்கப்பட்ட இன முரண்பாடுகளின் அறுவடையே என குஜராத் மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் ஷங்கர்சிங் வகேலா விமர்சித்துள்ளார்.

கடந்த வியாழனன்று அங்கு தேர்தல் நடந்திருந்தாலும், வாக்கெண்ணும் பணி நேற்றே அங்கு ஆரம்பமானது.

குஜராத்தில் தேர்தல் தொடர்பான வன்முறைகளில் ஆயிரத்திற்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டதும், இவர்களில் முஸ்லிம்களே அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.


ஹெப்ரோனில் பாடசாலைச் சிறுமிகளை தடுத்துவைத்திருக்கும் இஸ்ரேலியச்


மத்திய கிழக்கில் தமது ஆறுமாதப் பணியை முடித்து வீடுதிரும்பும் அமெரிக்கக் கடற்படையினர்.

# சதாமின் ஆட்சிக்கு எதிராக மாற்று அரசு அமைக்க முயற்சி

## அமெரிக்க ஆசீர்வாதத்துடன் லண்டனில் மாநாடு

(லண்டன்)

ஈராக்கின் சதாம் ஹுசைன் ஆட்சிக்கு எதிரான எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒன்றுகூடி, லண்டனில் மாநாடு ஒன்றை நடாத்தியுள்ளனர்.

சதாம் ஹுசைனைப் பதவியிலிருந்து அகற்றுவதே தமது பிரதான குறிக்கோள் என அவர்கள் தெரிவித்தனர்.

ஈராக்கினை ஜனநாயக நாடாக மாற்றவும், இதற்கான முயற்சிக்கு ஒரு கூட்டுக்குழுவை அமைப்பதெனவும் - மாநாட்டில் முடிவு காணப்பட்டது.

ஈராக்கிய தேசிய காங்கிரஸ், ஈராக் தேசிய உடன்பாட்டு அமைப்பு, ஈராக்கியப் புரட்சிக்கான சுப்ரீம் கவுன்சில், குர்திஷ்தான் ஜனநாயக்க கட்சி, குர்திஷ் நாட்டுப் பற்றாளர் யூனியன் ஆகியன இம்மாநாட்டில் பங்குபற்றியிருந்தன.

சதாம் ஹுசைனின் அரசாங்கத்திற்கு எதிரான மாற்று அரசாங்கமொன்றை அமைப்பது பற்றியும் அங்கு ஆராயப்பட்டது.

இதேவேளை - இம்மாநாட்டை வரவேற்றுள்ள அமெரிக்கா - தனது சார்பான பிரதிநிதி ஒருவரையும் லண்டனுக்கு அனுப்பியிருந்தது.


சதாமுக்கு எ... இத்தசாப்தத்தின் மிகப் பெரிய மாநாடு

### சிறுமிகள் இருவர் விபத்தில் கொல்லப்பட்ட சம்பவம்

# அமெரிக்காவுக்கு எதிராக தென்கொரியர் போராட்டம்!

(சியோல்)

தென்கொரியத் தலைநகர் சியோலில் இருந்து 320 கிலோமீற்றர் தொலைவிலுள்ள டேகூ நகரில், இராணுவத்தினரின் வாகனமொன்று மோதியதில் இரண்டு சிறுமிகள் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து - 50,000 இற்கும் அதிகமான மக்கள், அமெரிக்காவுக்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தியுள்ளனர்.

சியோலிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தை நோக்கியே ஆர்ப்பாட்டப் பேரணி அப்போது நடைபெற்றது.

விபத்தில் சம்பந்தப்பட்ட அமெரிக்க இராணுவத்தினர் இருவரும் - தென்கொரிய நீதிமன்றில் விசாரணைக்கு உள்ளாக்கப்பட வேண்டுமென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கோரினர்.

இதேவேளை- தென்கொரிய ஜனாதிபதி கிம்டே ஜுங்யைத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் - நடந்த சம்பவத்திற்கு வருத்தம் தெரிவித்திருந்தார்.

தென்கொரியாவில் சுமார் 37,000 அமெரிக்கப் படையினர் தளம் அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிறு விளம்பரம்

CANADA STUDENT VISA

கனடாவில் Student visa பெறுவது தொடர்பான விபரங்களுக்கு -
இல.140, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி,
T.P.No.2222478 (064)



சியோல் எதிர்ப்பு ஊர்வலத்தில் பாடசாலைச் சிறுமிகள்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

வலம்புரி பட்டாசுகள்
பண்டிகைக் காலங்களில் உங்களை மகிழ்விக்க
பட்டாசுகள், வாணவெடிகள்,
மத்தாப்புக்கள், சுழல் சக்கரங்கள்
ஏக விநியோகஸ்தர்
Saraswathi Stores
12, Wolfendhal Street, Colombo 13.
Tel : 348635, 432035 Fax : 471275
Email : saraswathy@sltnet.lk



# அமைதிக்கான ஜப்பான் உதவி; இந்தியா விரும்பவில்லையாம்!

## வெளியுறவுச் செயலர் நேரடியாகத் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறும் சமாதான முயற்சிகளுக்கு மேற்குலக நாடுகள், குறிப்பாக ஜப்பான் காட்டும் கரிசனை குறித்து இந்தியா தனது ஆட்சேபனையை இலங்கைக்குத் தெரிவித்துள்ளது.

இந்திய வெளியுறவுச் செயலர் கன்வால் சிபால் அண்மையில் கொழும்பு வந்தபோது இந்தியாவின் இக்கருத்து அரச உயர் பீடத்துக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கும் ஜப்பான் அதிக நிதியுதவி அளிக்கிறது. இப்போது இலங்கைக்கும் ஜப்பான் உதவுகிறது. இந்நிலையினால் பாகிஸ்தானின் செல்வாக்கு இலங்கையிலும் பரவலாம் என இந்தியா அஞ்சுகிறது. அத்துடன், மேற்குலக செல்வாக்கும் இலங்கையில் ஊடுருவுவதை இந்தியா விரும்பவில்லை என சிபால் எடுத்துக்கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - ஜனாதிபதி சந்திரிகாவுடன், ரணில் அரசு - நெருங்கி, ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் எனவும் இந்திய வெளியுறவுச் செயலர் கேட்டபோது,

பிரதமர் ரணிலும் அமைச்சர் பரிஸூம் - அப்படி நெருங்கிச் செயற்படக்கூடியளவுக்கு ஜனாதிபதி நேர்மையாகச் செயற்படவில்லை என எடுத்துக் கூறியதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பிரதிச் சபாநாயகர் பதவி கூட்டமைப்பு ஏற்காது!

(கொழும்பு)

தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவருக்கும் பிரதிச் சபாநாயகர் பதவி தருவதற்கு அரசாங்கம் முன்வந்தாலும், அதனைக் கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளாது என, அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரிக்கு பிரதிச் சபாநாயகர் பதவியை அளிக்க வேண்டுமெனக்கோரி, அமைச்சர் மகேஸ்வரன் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

இது சம்பந்தமாக 'நமது ஈழநாடு' - வீ.ஆனந்தசங்கரியை முன்னர் தொடர்புகொண்டபோது எக்காரணம் கொண்டும் தான் அப்பதவியை ஏற்கப்போவதில்லை என அவர் உறுதிபடக்கூறியது தெரிந்ததே.

இதையடுத்து, எழுந்த கருத்துக்கள் பற்றியே கூட்டமைப்பு வட்டாரங்கள் கூறுகையில் - பிரதிச் சபாநாயகர் பதவியை எக்காரணம் கொண்டும் தாம் ஏற்கப்போவதில்லை எனத் தெரிவித்தன.

# புலிகளின் வானொலிக்கு அரசு அனுமதி அளிப்பு!

(புதுடெல்கி)

கிளிநொச்சியில், புலிகள் தமது வானொலி நிலையத்தை அமைக்க இலங்கை அரசு அனுமதி அளித்துள்ளதாக பி:ரி.ஐ செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இதற்கான அனுமதியை புலிகளின் சமாதானச் செயலணியிடம் அரசு வழங்கியுள்ளதாகவும், இந்த வானொலி நிலையம் பண்பலை வரிசை ஒலிபரப்பை நடத்தக் கூடிய வகையில் 1 லட்சம் டொலர் பெறுமதியான சாதனங்களை கடந்த வாரம் இறக்குமதி செய்துள்ளதாகவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் பின்பற்றும் சட்டவிதிக் கோவைகளின் அடிப்படையிலேயே புலிகளின் வானொலியும் இயங்கும் எனக் கொழும்பில் ஒலிபரப்புத் துறை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

புலிகளின் இந்த வானொலி ஒலிபரப்பு இந்தியாவில் சில பகுதிகளுக்குத் தெளிவாக கேட்கலாம் என்ற அச்சநிலை இந்திய தரப்பில் தெரிவிக்கப்பட்டபோதும், இவ்வானொலி எப்.எம். ஒலிபரப்பு என்பதால் இது குறித்து பெரிதாக அச்சங்கொள்ளத் தேவையில்லை என வேறு சில இந்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# விமானப்படைக்கு சீன விமானங்கள்

## எனினும் விமானிகளுக்குப் பற்றாக்குறை

(கொழும்பு)

விமானப்படைக்கு பயிற்சி விமானங்கள் சீனாவிலிருந்து கொள்வனவு செய்யப்படவுள்ளன. ரி-8 ரக இந்த விமானங்கள், விமானப் படை விமானிகளுக்கான பயிற் சியை வழங்கப் பயன்படவுள்ளன.

இதேவேளை - விமானப்படையில் விமானிகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாக, விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்துள்ளார்.

விமானப்படைக்கு 200 விமானிகள் தேவைப்படும் அதேவேளை, 125 விமானிகளே தற்சமயம் சேவையாற்றுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய இந்தக் காலகட்டத்தில் இந்த 125 விமானிகளுடன் நிலைமையைப் பூர்த்தி செய்ய முடியும் என்றாலும், அவசர தேவை ஏற்படும் காலத்தில் மேலதிக விமானிகள் தேவைப்படுவார்கள் என்றும் விமானப்படைத் தளபதி பெரேரா மேலும் கூறினார்.

(01)

## வெளிநாட்டு...

இக்கூட்டம் நேற்று மதியம் 2.30 மணி தொடக்கம் இரவு 9.30 மணி வரை நீண்டநேரமாக நடைபெற்றது.

வட - கிழக்கு புனர்வாழ்வு அபிவிருத்திக்கான செயலகத்தின் நிர்வாகக் கட்டமைப்புப் பற்றியும், இச்செயலகத்துக்கான வரவு செலவுத் திட்டம் குறித்தும், இச்செயலகத்துக்குக் கிடைக்கும் நிதிக்கு யார் பொறுப்பு என்பது பற்றியும் நேற்றைய கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

மேற்படி கூட்டத்தில், விடுதலைப் புலிகள் தரப்பில் - அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், முக்கிய பிரமுகர் பாலகுமாரன், நிர்வாகசேவைப் பொறுப்பாளர் பூவண்ணன், தமிழர் புனர்வாழ்வுக்கழக வெளிநாட்டு இணைப்பாளர் ஜோய் மகேஸ்வரன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் தூயவன், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் றெஜி, திருமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக், மட்டக்களப்பு அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், புலிகளின் சமாதானச் செயலகப் பொறுப்பாளர் புலித்தேவன் ஆகியோரும்,

அரசின் சார்பில் - சமாதானச் செயலகத் தலைவர் பேணாட் குணதிலக, எம்.ஐ.எம்.ராபீக், எம்.டி.தர்மசிறி பீரிஸ், நாடாளுமன்ற உறுப்பினர் றிசாட் பதியுதீன், பிரதமரின் ஆலோசகர் கலாநிதி குணசிங்கம் அம்பலவாணர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இவர்களை விட அபிவிருத்திப் புனர்வாழ்வுச் செயலகப் பணிப்பாளர் செல்வின் இரேனியஸ் மற்றும் உதவிப் பணிப்பாளர்களான டி.டி. அமரதுங்க, சுலைமான் லெப்பை முஹமட் பளீல் ஆகியோரும்,

நோர்வேயின் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க், மற்றும் ஜப்பானிய தூதுவர் ஒட்சுகா, உபகுழுச் செயலக ஆலோசகர்கள் ஜிம் றொபிட்சன், குபிருட், ஆகியோரும் கலந்துகொண்டனர். இன்று காலையும் பேச்சுவார்த்தைகள் தொடரவுள்ளன.

## அபிவிருத்தி.....

அமைச்சின் பணிப்பாளராகப் பணியாற்றி வருகின்றார்.

ஏற்கனவே - இவர், யாழ். அரச செயலகத்தில் உதவித்திட்டப் பணிப்பாளராகவும், திட்டப் பணிப்பாளராகவும் சேவையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரது நியமனம் பற்றி 'நமது ஈழநாடு' முதன்முதலில் தகவல் வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இரேனியஸ் செல்வினுடன் மேலும் இருவர் பிரதிப் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

டி.டி.அமரதுங்க மற்றும் தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உதவிப்பதிவாளர் சுலைமான் லெப்பை முஹமட் பளீல் ஆகியோரே பிரதிப் பணிப்பாளர்களாக அரசாங்கத் தரப்பின் சிபாரிசில் நியமிக்கப்பட்டனர்.

## புனர்வாழ்வு....

ஒரு மகத்தான திருப்பம் மட்டுமல்ல குறிப்பிடத்தக்க ஒரு மைல் கல்லாகும்.

சமாதானக் காற்று வீசும் இந்தச் சந்தர்ப்பத்தில் இத்தகைய செயலகத் திறப்பு, நிச்சயம் மக்கள் வாழ்வில் நிம்மதியான வாழ்க்கையைப் பெற்றுத்தரும் என்பதில் சந்தேகமில்லை என்றார்.

காலை 11 மணியளவில் அரச தரப்புப்பிரதிநிதிகளும் நோர்வே மற்றும் ஜப்பான் தூதுவர்கள் வருகைதந்தபோது விடுதலைப் புலிகள் தரப்பில் புலித்தேவன், தங்கன், தூயவன் ஆகியோர் வரவேற்றனர்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் வைத்து அவர்களை, அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், பாலகுமாரன், மகேஸ்வரன் ஆகியோர் வரவேற்றனர்.

பின்னர் செயலகத் திறப்பு விழா நடைபெற்றது. செயலகத்தை அனைவரும் சென்று பார்வையிட்டனர்.

## வடக்கு....

கடற்படைக் கட்டளைத் தளபதிப் பதவிக்குக் கிழக்குப் பிராந்தியக் கடற்படைக் கட்டளைத் தள்பதி றியர் அட்மிரல் சரத் ரத்னகீர்த்தி நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. மேற்குப் பிராந்தியக் கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் தயா தர்மபிரிய வெளிநாடு செல்கிறார். கிழக்குக் கடற்படை கட்டளைத் தளபதியாக றியர் அட்மிரல் வசந்த கருணாகொட நியமிக்கப்பட்டுள்ளார். (01)

# கன்வால் சிபாலைச் சந்தித்த மூத்த கூட்டமைப்பு உறுப்பினர்!

(கொழும்பு)

அண்மையில் கொழும்பு வந்திருந்த இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் கன்வால் சிபாலை தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் சந்திக்கவில்லை எனச் செய்திகள் வெளியாகியிருந்தபோதும் - கூட்டமைப்பின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அவரைச் சந்தித்துப் பேசியதாகத் தெரியவருகின்றது.

குறிப்பிட்ட அந்த சிரேஷ்ட உறுப்பினர் - தனிப்பட்ட சந்திப்பாகக் கன்வால் சிபாலுடன் பேச்சுக்களை நடாத்தியதாகவும் மேலும் தெரியவருகின்றது.

# தமிழக முஸ்லிம் தீவிரவாதி பயிற்சிபெற இலங்கைக்கு?

(சென்னை)

தமிழகத்தில் கைதான 'முஸ்லிம் பாதுகாப்புப்படை' என்னும் பெயரிலான தீவிரவாதக் குழுவொன்றின் உறுப்பினர்களில் ஒருவர், அண்மையில் கொழும்புக்கு வந்து சென்றதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இதுபற்றி விசாரித்து வரும் தமிழகப் பொலிஸார், இவர் கொழும்பு வந்து சென்றதன் காரணம் - ஆயுதப் பயிற்சி பெறுவதாக இருக்கலாமெனச் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த 6 ஆம் திகதி அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட தினமன்று, தமிழகத்தில் இந்து ஆலயங்கள் சிலவற்றைத் தாக்குவதற்கு இக்குழுவினர் தயாராக இருந்ததாகவும் -

இவர்களில் 11 பேர்வரை இதுவரை கைது செய்யப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு வந்துசென்ற குறிப்பிட்ட நபர், ஆறு மாதங்களுக்கு முனனர் தனது பயணத்தை மேற்கொண்டதாகவும், சமயக்கடமை ஒன்றுக்காகவே அவர் கொழும்பு வந்து சென்றதாகக் கூறியபோதும்-

இந்த விஜயத்தில் மறைமுகக் காரணம் இருக்கலாமெனவும் தமிழகப் பொலிஸார் கூறுகின்றனர்.

## நெடுந்தீவிலிருந்து...

போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களுடன் கலந்துரையாடினர். பின்னர் யாழ். ஆயர் அங்கு மக்கள் மத்தியில் உரை நிகழ்த்தினார். இதன்போது இந்தப்பிரச்சனை அரசியல் பிரச்சினை. அரசியலுக்கும் எமக்கும் தொடர்பில்லை. நாம் மனிதாபிமான நோக்கத்துடனே இங்கு வந்துள்ளோம். எனினும், இப்பிரச்சினையைத் தீர்க்க எம்மாலான முயற்சிகளை மேற்கொள்கிறோம். இப்போது சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நேரத்தில் இப்படியான சிறு பிரச்சினைகள் சமாதான முயற்சியைப் பாதிக்காத வகையில் நாம் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

மக்களுடன் கலந்துரையாடிய இக்குழுவினர் - பின்னர், நெடுந்தீவிலுள்ள ஈ.பி.டி.பியினரைச் சென்று சந்தித்தனர். இதன்போதே ஈ.பி.டி.பியினர் - நாம் மக்கள் கூறுவதுபோல் நெடுந்தீவிற்கு இரவில் இராணுவ கடற்படைப் பாதுகாப்பில் வந்திருந்தால் நெடுந்தீவைவிட்டு வெளியேறுகிறோம். ஆனால், நாம் மீண்டும் எவரினதும் பாதுகாப்பும் இல்லாமல் மீண்டும் நெடுந்தீவிற்கு வரும்போது மக்கள் எம்மைத் தடுக்கமாட்டார்கள் என உத்தரவாதம் வேண்டுமென ஆயரிடம் கேட்டனர்.

பின்னர், யாழ். ஆயர் குழுவினர் நெடுந்தீவிலுள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகத்திற்குச் சென்று விடுதலைப் புலிகளுடனும் கலந்துரையாடல் நடாத்தி விட்டு மாலை 3.30 மணியளவில் யாழ்ப்பாணம் திரும்பினர். (113)

English Academy
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
E.mail: thangan 672002 @ yahoo.com
T.P.: 021-2222588
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
பிரதான வீதி, சித்தங்கேணி.
Better place for your Children
உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த இடம்
(சி-186)

O/L முடித்த A/L மாணவர்களுக்கான கணனி வகுப்புகள்
General Information Technology - GIT
Drive Your IT on GIT
Syllabus Covers "London A/L" Computing
GIT
MS Office
Internet
கணனியூடான A/L
No Scholarships!
But Less Charges!!
Gain International Standard!!!



பதிவுகளுக்கு
STP Computer World (Pvt.) Limited. Kantharmadam, Jaffna
Branch Sankaththanai, Chavakachcheri
ஆரம்பம் 18-12-2002

இப்பத்திரிகை - இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.